81

ஸுபாநு ஹூ
மாசி - பங்குனி மீ

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 APR 1944
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரகாசிக்குமிடம் :

ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

வா
ரூபா

March, 1944
Vol. 3, No. 3

JL
இ22ணவ11, N41
N44·3·3
2/6/22

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	அபிநவ யதிராஜ மங்களாசாஸநம்			....	78
2.	ஸாம்ய புத்தி	....	....	....	81
3.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்		....	....	89
4.	குஶல ப்ரார்த்தநம்	...	...	....	90
5.	உண்மை வைணவன்		....	....	93
6.	ஒரு திருத்தம்	....	....	....	97
7.	செய்திகள்	....	....	....	98
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்		....	....	105

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3	ஸுபாநு வருஷ மாசி - பங்குனி மீ	ஸஞ்சிகை 3

“ அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||”

14 APR 1944
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹசரணாச்ரிதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் [illegible]யமாய் வஸிக்கடவது.]

॥ श्रीः ॥

॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

॥ अभिनवयतिराजमङ्गलाशासनम् ॥

[வ்யாகரண வித்வான், வ்யாகரண வித்யா ப்ரவீணர்,
ஸ்ரீ. உப. பாதூர் புராணம் ந. ராகவாசார்யர்
வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத காலேஜ், மதுராந்தகம்]

यत्र श्री :प्रचकास्ति नित्यमखिलाम्नायान्तसंविन्मयी
यस्मै रं जित सद्हृदे नरहरिर्लक्ष्मीधरस्तिष्ठते ।
नम्रैर् गे यगुणाय वैष्णवकुलैराचार्यपीठीजुषे
तस्मै श र्म समस्तु रङ्गशठजिन्नाम्ने महायोगिने ॥ १

यदः य क्षे श्रीमत्सदसि भगवल्लक्ष्मणवचः-
प्रश ती राराष्टि प्रतिशरदमुत्तेजितबुधा ।
जना न्दु :खाम्भोधेस्सदयहृदयायोद्धृतवते
भज ना थायास्मै भवतु शुभमाचार्यमणये ॥ २

श्रियः क न्रो येन प्रतिकलमुपेतो जगदव-
त्यहो रु न्धन्नंहोनिवहमनघानन्दभरितः ।
करे ण व्याख्यानं परिकलयते रङ्गशठजित्-
समाख्या यास्त्वस्मै शुभमविकलं योगिपतये ॥ ३

मनस सौ हित्येनोल्लसति सततं यस्य सुकृती
जनस स्या घदृष्ट्या नृहरिकरुणाश्लेषविषयः ।
गुणैर् दि क्षु स्फीतं यश उपगताय प्रणिदध-
त्तमस् ति ग्मद्योताय भवतु शुभं ज्ञाननिधये ॥ ४

गुरु प्रे मस्थाने महति मधुरान्ताख्यनगरे
हिते क्षि त्वाद्विद्यासदनमनघं येन विदधे ।
समस तं व्यानम्रं निजचरणयो र्लोकमवते
शुभा ख्या यास्मै स्याद्ध्रुवुकमखिलं संयमवते ॥ ५

शुभं त न्वन् भूयस्सहरमनृसिंहाङ्घ्रिविनतो
गुरुः श्री भाष्यस्य प्रवचनमधिष्ठाय धरणौ ।
शतं न स्नाता स्याच्छरद इति गीताय सकुलै-
र्गुणै र म्यायास्मै भवतु भवुकं भव्ययशसे ॥ ६

दया सिं धुर्दैवः प्रमदति यदाराधितपदो
यतो ह र्षो नृणामुपनमति दुःखप्रतिभटः ।
अलं का रायास्मै विबुधमहिताया गुरुतते-
र्गुणै रि न्धानाय प्रवहतु शुभं योगिमणये ॥ ७

भजज ज न्मध्वंसिप्रजननकृतो यस्य हि गुरो-
र्दशा मु क्तिं नृणां करबदरकल्पां निजगदुः ।
वरा नीड् यायास्मै सपदिविनतानां वितरते
शुभा पा ङ्गाय स्याच्छुभमखिललोकाधिपतये ॥ ८

महो दा रं धीरं सहजकरुणापूर्णहृदयं
गुरु म्बु द्ध्वा लोकः श्रयति शरणत्वेन यमसौ ।
सदा जे त्रे दुर्वादिन उरुगुणायास्तु भजता-
मस न्दि ग्धं शास्त्रप्रवचनकृते भव्यममितम् ॥ ९

धिय न्दि ष्ट्या पुष्णन् जयति सन्नृसिंहप्रियतया
गुरू रं गक्षोणीशठजिदभिमान्यः श्रुतिविदाम् ।
यतो दा न्ति नॄणां भवति शुभनिश्श्रेयसपदं
शुभ न्ति ग्मज्योतिर्विजयिरुचयेऽस्मै विलसतु ॥ १०

यदी क्षां विद्वांसो निगमनयसंशीतिशमनीं
विना ति र्यक्साम्यं न गलति नराणामिति विदुः ।
शुभो द न्तायास्मै दिशि दिशि विसर्पत्स्वयशसे
शुभं या वद्भूयाद्यतिनृपतिरूपाय हरये ॥ ११

सदा दि व्ये देहे हरिचरणपङ्केरुहनिभैः
स्फुरद् भि स्संदीप्तो द्व्यधिकदशभिः पुण्ड्रतिलकैः ।
यश श्शु भ्रो यो भात्यहह धृतकाषायवसनो
महद् भ व्यं तस्मै भवतु भवविच्छेदिमहसे ॥ १२

गिरां गु म्भैरम्भोरुहनयनहृद्रञ्जकतमैः
सवर् णै र्जाह्नव्या जगदिदमशेषं परिपुनन् ।
त्रिभि र्भा स्वान्दण्डैर्विलसदुपवीतो यतिपति-
र्महा न्तं सन्तोषं मनसि मम नित्यं कलयतु ॥ १३

यतो बु द्ध्वा तत्त्वं विगलिततमा यत्करुणया
परे धा म्नि न्यस्यन् निजभरमयं निर्गतभयः ।
यद ग्रे शिष्यौघः प्रपठति यशो यस्य मधुरं
मुदे स स्याद्रङ्गक्षितिशठजिदाह्वो मुनिवरः ॥ १४

पदं रं गक्षोणीशठमथननाम्नो गुरुमणेः
शुभं श्री मन्नत्वा भवति कुशली को न जगति ।
अतो म चा लोकाश्श्रयत तदमुष्याङ्घ्रिकमलं
सुभ द्रं तत्पद्यं पठत सुकृतित्वं व्रजत च ॥ १५

सतां ग म्यः श्रीमान्निखिलनयवित्संयमिपति-
र्बुधैः श श्वद्गीतं प्रतिदिशमभिप्राप्य सुयशः ।
स मा ठा धीश्यं श्रीनृहरिदयया बिभ्रदिह नः
शुभै रि न्धां भूयो निगमपदवीरक्षणकृते ॥ १६

वदान् यो विद्यानां विहरणपदं लक्ष्मणमुने-
र्गुरोर् गि र्यत्यन्तप्रसितमतिरिन्धानमहिमा ।
गुणैर् नृ त्यत्वद्धा मम मनसि नित्यं यतिपति-
र्महर प ण्यो रङ्गावनिवकुलमालाधरगुरुः ॥ १७

नतार् तिं निर्भिन्दन् भगवति भरन्यासकलनात्
परं श्रे यस्तन्वन् प्रतिनगरमायाति सहरिः ।
धियो यो नः शश्वन्नुदति च दयोत्तुङ्गहृदयो
मुनिर् नि र्धूताघः शुभमिह स पुष्णातु बहुलम् ॥ १८

दयाब् धिं श्रीकान्तं नृहरिमनुवेलं यतिनृपो
नमन् सं हृष्टात्मा विनयिषु रहस्यान्युपदिशन् ।
सतां श्र द्धेयोक्तिः सकलभुवनश्लाघनपदं
शुभा ये न्धां रङ्गक्षितिशठरिपुर्नः पतिरिह ॥ १९

तृतीये प्रद्योते गुणमहति मालोलसदसः
पुरस्ताच्छ्रीरङ्गक्षितिवकुलमालाधरगुरोः ।
उदीतं श्रीवत्सान्वयकृतजनूराघवमुखात्
शुभं पद्यं शृण्वन् स्मितधरमुखो भाति नृहरिः ॥ २०

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸாம்ய புத்தி

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 1, பக்கம் 4ன் தொடர்ச்சி]

ஆக இதனுல், பகவத்கீதை ஐந்தாவது அத்யாயத்தி லிருக்கும்

"வித்யா விநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ।
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஶிந: ॥"

என்கிற ஶ்லோகத்தில், பசு யானை நாய் இவைகளை ஸமாநமாகப் பார்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தாலும், இவைகள் பல படிகளினுலும் வேறுபட்டவைகளாகவே ப்ரத்யக்ஷ ப்ரமாண ஸித்தமாக இருக்கின்றன வாதலால், ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமாகப் பசுக்களை யானைகளுக்கு ஸமாநமாகவும் ஶ்வாநங்களை யானைகளுக்கும் பசுக்களுக்கும் ஸமாநமாகவும் பார்க்க முடியாது. அதுபோல ப்ராஹ்மணன் தொடங்கி ஶ்வபாகன் வரை பலவித ஜாதிகளும் அந்தந்த ஜாதிகளுடைய ஆசார பேதங்களும் மநுஸ்ம்ருதி பகவத்கீதை முதலிய ஶாஸ்த்ர ஸித்தங்களாகையினுல், அந்த ஶாஸ்த்ரங்களுக்கு விபரீதமாக மனிதர்கள் எல்லாரையும் ஒரே ஜாதியை உடையவர்களாகவும், அந்தந்த ஜாதிகளின் ஆசார பேதங்களை விட்டு ஒரே ஆசார முள்ளவர்களாகவும் பார்க்கவேணுமென்று 'ஸமதர்ஶிந:' என்கிற சப்தத்திற்கு அர்த்தம் சொல்வது உசிதமாகாது. இவ்வாறு நிச்சயிக்கப்படுகிறபடியினுல், இக்காலத்துச் சில அறிவிலிகள், 'பகவத் ராமாநுஜன் ஒருவர்தான் ஸரியான ஸாம்ய புத்தி யுடையவர் என்றும், அவர் ஜாதி பேதங்களையும் அந்தந்த ஜாதிகளுடைய ஆசார பேதங்களையும் ஆதரிக்காமல் எல்லா ஜாதி மனிதர்களிடத்திலும் ஸாம்ய புத்தியினுல் கலந்து பரிமாறியிருந்தார் என்றும், தீண்டாமை முதலிய ஆசாரங்களை அவர் ஆதரித்து அநுஷ்டிக்கவில்லை' யென்றும் எழுதியிருப்பதும் உபந்யஸிப்பதும் மிகவும் தப்பானதென்பதும் சொல்லப்பட்டதாகிறது.

கீழே குறிப்பிட்ட "அநுஜ்ஞாபரிஹாரௌ தேஹஸம்பந்தாத் ஜ்யோதிராதிவத்" என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தில், ஸ்ரீ பகவத் ராமாநுஜன் பின்வருமாறு எழுதியிருக்கிருர். "ஶ்மஶாநத்தி லிருக்கும் அக்நியும் ஶ்ரோத்ரியன் வீட்டிலிருக்கும் அக்நியும் ஒரேவிதமாக இருந்தாலும், ஶ்ரோத்ரியன் வீட்டிலிருக்கும் அக்நி சமையல் பண்ணுவது முதலிய கார்யங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. ஶ்மஶாநத்திலிருக்கும் அக்நி

ஒரு கார்யத்துக்கும் உபயோகப்படுத்தப்படுவதில்லை. அப்படியே எல்லா ஜீவாத்மாக்களும் ஸமானமான ஸ்வரூபமுள்ளவர்களாக இருந்தாலும், ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்ய சூத்ராதி ரூபங்களான பற்பல ஶரீரங்களுக்குள், சுத்தமான சில சரீரங்களோ டிருக்குமவர்களை ஶாஸ்த்ரங்கள் பார்க்கலாம் என்றும் தொடலாம் என்றும் விதிக்கின்றன; அசுத்தமான சில சரீரங்களோ டிருக்குமவர்களைப் பார்க்கக்கூடாது என்றும் தொடக்கூடாதென்றும் நிஷேதித்திருக்கின்றன" என்று எழுதியிருக்கிறார். ஆகையினால், பாஷ்யகாரர் தீண்டக்கூடாத சில தேக ஸம்பந்தத்தினால் சில மனிதரைத் தீண்டக்கூடா தென்றும் பார்க்கக் கூடாதென்றும் முக்யமான ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தில் எழுதிவிட்டு, அதற்கு விபரீதமாக ஜாதி பேதங்களை ஆதரிக்காமலும் தீண்டாமையை ஆதரிக்காமலும் அம்மஹா புருஷன் எழுந்தருளியிருந்ததாகச் சொல்வது உசிதமாகுமா? ஆகவே பகவத் ராமாநுஜன், "ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய:" "ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத:" என்கிற கீதா ஶ்லோகங்களில் எழுதியிருக்கிறபடியே, தமது ஜாதி ஆஶ்ரமம் இவைகளுக்குரிய தர்மங்களையும் ஆசாரங்களையும் ஸம்பூர்ணமாக அநுஷ்டித்துக்கொண்டு, ஶாஸ்த்ர விரோத மில்லாத ஸாம்ய புத்தியுடன் எழுந்தருளி யிருந்தார் என்பதே மஹான்களுடைய தீர்மானம்.

இதுபோலவே வேறு சிலர், நமது முன்னோர்களான மஹர்ஷிகள் எல்லா மனிதர்களிடத்திலும் ஸாம்ய புத்தி இல்லாதவர்க ளென்றும், ப்ராம்ஹணர்களிடம் பக்ஷபாத முள்ளவர்க ளென்றும், மற்றை ஜாதியார்களிடம் த்வேஷ முள்ளவர்க ளென்றும், ஆகையினால்தான் தாங்கள் எழுதிய தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களில் ப்ராம்ஹண ஜாதியை உயர்ந்ததாகவும், மற்றை ஜாதிகளைத் தாழ்ந்ததாகவும் எழுதி வைத்ததோடு, மற்றை ஜாதிகளை ப்ராம்ஹணர்களுக்குப் பணிவிடை செய்யும்படி எழுதிவைத்தார்க ளென்றும் கூறுகிறார்கள். தவிர: பாவங்களுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுமிடத்து, ப்ராம்ஹணர்களுக்கு லகுவான ப்ராயஶ்சித்தங்களையும் மற்றை ஜாதிகளுக்கு மிகவும் கடுமையான ப்ராயஶ்சித்தங்களையும் தண்டனைகளையும் விதித்திருக்கிறார்க ளென்றும் சொல்லுகிறார்கள். இதுவும் அல்லாமல் ஒருசிலர், மநுஸ்ம்ருதி முதலிய தர்ம சாஸ்த்ர க்ரந்தங்களையும் அக்நிபகவானுக்கு ஆஹாரமாக்குகின்றார்கள். அந்தோ! இது என்ன பேதமை! கலிபுருஷன் கொடுமையினால் மதிமயங்கிக் கிடக்கிற புத்திமான்களுடைய மஹாமோஹத்தை நம்மால் நிவர்த்திக்க முடியாவிட்டாலும், இவர்களுடைய அஸத்யமான உபதேசங்களைக் கேட்டுப் பக்ஷபாத ப்ரஸக்தியில்லாத மஹர்ஷிகளிடம் த்வேஷம் கொள்ளும் மந்த மதிகளைத் தெளிவிப்பதற்காகவேனும் நாம் அம்மஹர்ஷிகளுடைய சில நல்வார்த்தைகளையும், அவர்கள் எல்லா மனிதர்களிடமும் ஸாம்ய புத்தியுள்ளவர்கள் என்பதையும், ப்ராம்ஹண ஜாதியிடத்தில் பக்ஷபாத மில்லாதவர்கள் என்பதையும் விஸ்தாரமாக நிரூபிக்கிறோம்.

முன்பு, தீண்டாதாருடைய கிணற்றிலும் பாத்ரங்களிலு மிருக்கிற ஜலத்தைச் சாப்பிட்டவர்களுக்கு ஆபஸ்தம்ப பராஶராதி மஹர்ஷிகள் ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லியிருப்பதை நாம் கீழே உதாஹரித்திருந் தோம். இப்போது அது விஷயமான சில வசநங்களைக் காட்டுகிறோம். மஹாபாரதம் சாந்தி பர்வத்தில், மனிதர்களால் செய்யப்படும் பாபகர்மங் களுக்கு ப்ராயஶ்சித்தத்தைச் சொல்லுகிற விடத்தில்,

" வதுஷ்ராஸ ஸகலொ யஶ்ழா ஜூாஹ்மணஸ்ய வியீயதெ |
வாதொந ஐஷொ ராஜந்ய தயா யஶ்ழா வியீயதெ |
தயா வெஶ்ய வ ஶுத்ரெ வ வாதஃ வாதொ வியீயதெ‖ "

[ப்ராம்ஹணன் ஒரு பாபத்தைச் செய்தால் அவன் அந்தப் பாபத்தைச் செய்ததற்காக ஸம்பூர்ணமான ப்ராயஶ்சித்தத்தை அநுஷ்டிக்க வேண் டும் என்றும், அதே பாபத்தை க்ஷத்ரியன் செய்தால் ப்ராம்ஹணன் செய்யும் ப்ராயஶ்சித்தத்திற்குக் குறைவாக முக்கால் பங்கு ப்ராயஶ்சித் தத்தைச் செய்யவேண்டுமென்றும், அதே பாபத்தை வைஶ்யன் செய் தால் ப்ராஹ்மணன் செய்யும் ப்ராயஶ்சித்தத்திற்கு அரைப்பங்கு ப்ராயஶ் சித்தம் பண்ணினல் போதுமென்றும், அதே பாபத்தை நான்காவது வர்ணத்தான் செய்தால் ப்ராம்ஹணன் செய்யும் ப்ராயஶ்சித்தத்திற்குக் கால்பங்குப்ராயஶ்சித்தம் பண்ணினல் போதும்] என்று ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படுகிறதாகச் சொல்லப்படுகிறது. இதை அநுஸரித்து, சண்டாள னுடைய கிணற்றிலோ அல்லது பாத்ரத்திலோ இருக்கும் ஜலத்தைத் தெரியாமல் சாப்பிட்ட ப்ராம்ஹணனுக்கு 'ஸாந்தபநம்' என்கிற கஷ்டமான ப்ராயஶ்சித்தத்தையும், அதே ஜலத்தை க்ஷத்ரியன் சாப்பிட் டால் 'ப்ராஜாபத்யம்' என்கிற க்ருச்ரத்தையும், அதே ஜலத்தை வைஶ்யன் சாப்பிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தில் பாதியை அநுஷ்டித்தால் போது மென்றும், அதே ஜலத்தை நான்காவது வர்ணத்தான் சாப்பிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தில் கால் பங்கு அநுஷ்டித்தால் போதுமென்றும் ஆபஸ்தம்பரும் பராஶரரும் சொல்லியிருக்கிறார்கள். இதை முன்னமே எழுதியிருக்கிறோம். இதுபோலவே, ஒரே பாபத்தை ப்ராஹ்மணன் செய்தால் அந்தப் பாபத்திற்குப் பரிஹாரமான ப்ராயஶ்சித்தத்தை ப்ராம்ஹணனுக்குக் கஷ்டப்பட்டுச் செய்யக்கூடியதாகவும், மற்றை ஜாதிகள் அதே பாபத்தைச் செய்தால், அதற்கு அவர்களுக்குப் பரிஹாரங்களான ப்ராயஶ்சித்தங்களை ப்ராம்ஹணனுக்கு விதித்திருப்ப தைக் காட்டிலும் லகுவாகவே ப்ராயஶ்சித்தங்களை விதித்திருப்பதைப் பல விடங்களிலும் பார்க்கலாம். இதற்கு உதாஹரணமாக மநு ஸ்ம்ருதி 8-வது அத்யாயத்தில்,

" ஊஷ்டாவாத்யம் து ஶுத்ரஸ்ய ஷெயெ ஹவதி கில்பிஷம்
ஷொஃஶைவ வெஶ்யஸ்ய த்ரிம்ஶத் க்ஷத்ரியஸ்ய வ |
ஜூாஹ்மணஸ்ய வதுஷ்ஷஷ்டிஃ வூணம் வாவி ஶதம் ஹவெத்
த்விமுணா வா வதுஷ்ஷஷ்டிஃ தத்தொஷமுணவித் ஹிஸஃ ‖"

என்கிற வாக்யங்களினால், ஒரு வஸ்துவைத் திருடின சூத்ரனுக்கு 8 ரூபாய் அபராதமும், அதே வஸ்துவைத் திருடின வைஶ்யனுக்கு 16 ரூபாய் அபராதமும், அதே வஸ்துவைத் திருடின க்ஷத்ரியனுக்கு 32 ரூபாய் அபராதமும், அதே வஸ்துவைத் திருடின ப்ராம்ஹணனுக்கு 64 ரூபாயாவது 100 ரூபாயாவது 128 ரூபாயாவது அரசன் அபராதம் விதிக்கவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறது. இங்கு ஒரே குற்றத்திற்கு நான்காவது வர்ணத்தாருக்கு 8 ரூபாய் அபராதமும், அதே குற்றத்தைச் செய்த ப்ராம்ஹணனுக்கு 128 ரூபாய் அபராதமும் விதித்திருக்கும் மநுவுக்கு எந்த ஜாதியில் பக்ஷபாத மென்பதைப் புத்திமான்கள் கவனிக்கவேண்டும் இப்படியே மநுஸ்ம்ருதி 11-வது அத்யாயத்தில்,

"ஸுராம் பீத்வா த்விஜோ மோஹாதக்னிவர்ணாம் ஸுராம் பிபேத்|
தயா ஸ காயே நிர்தக்தே முச்யதே கில்பிஷாத்தத: ||"

[ப்ராம்ஹணன் கள்ளைக் குடித்தால் அதற்கு ப்ராயஶ்சித்தமாகக் கள்ளை நெருப்பைப்போல் நன்றாகக் காய்ச்சி, கள்ளைக் குடித்த ப்ராம்ஹணன் வாயில் அந்த உஷ்ணமான கள்ளைக் கொட்டி, அதனால் அந்த ப்ராம்ஹணன் இறந்துபோனால் அவனுடைய கள்குடித்த பாபம் போகும்] என்று ப்ராம்ஹண ஜாதிக்கு மரணாந்தமான ப்ராயஶ்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றை ஜாதிகள் கள்ளைக் குடித்தால் சிக்ஷை சொல்லப்படவில்லை.

[தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸுபாநுஸ்ரீ பங்குனிமீ

1௳ செவ்வாய்க்கிழமை	—	மீன க்ருஷ்ண பஞ்சமி திதி.
8௳ செவ்வாய்க்கிழமை	—	ஸ்ரீவைஷ்ணவ ஏகாதசி
11௳ வெள்ளிக்கிழமை	—	அமாவாஸ்யை
12௳ சனிக்கிழமை	—	ப்ரதமை - த்விதீயை திதித்வயம்.
13௳ ஞாயிற்றுக்கிழமை	—	த்ருதீயை திதி
19௳ சனிக்கிழமை	—	நவமி திதி
20௳ ஞாயிற்றுக்கிழமை	—	ஸ்ரீராமநவமி, தசமி திதி
21௳ திங்கட்கிழமை	—	அதிதி
22௳ செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
25௳ வெள்ளிக்கிழமை	—	பங்குனி உத்திரம்
30௳ புதன்கிழமை	—	மீன க்ருஷ்ண சதுர்த்தி திதி மேஷ ரவி 53-45. விஷு புண்ய காலம் மறுநாள்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ உப அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.B.L.,]
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 1, பக்கம் 8-ன் தொடர்ச்சி]

[காமன் முதலிய சத்ருக்கள் ஸேனை வ்யூஹம் வகுத்தல். காமனும் வஸந்தனும் ப்ரவேசிக்கிறார்கள். காமன் தோழன் வஸந்தனிடம் பேசுகிறான்.]

"इक्षुः पेशलमीदृशं मम धनुः पुष्पाण्यमी सायकाः
तन्त्रीमंजुलनिस्वना मधुकरश्रेणी शुभा शिंजिनी।
भीरुः सन्नवलाजनो मम बलं तथ्यं परं कथ्यते
सोऽहं निर्जितशूलभृत्प्रभृतिकः सङ्कल्पसिद्धोदयः॥"

காமன் :—வளைக்கும்போதே இப்படி முறியக்கூடிய மிக ம்ருதுவான இக் கரும்பு என் வில்; இதோ இந்தப் புஷ்பங்களே என் அஸ்த்ரங்கள்; வீணையிலும் இனிமையாய் ஶப்திக்கும் இத்தேன்வண்டுக் கோவையே என் அழகிய நாண் கயிறு; பயத்துடனும் நடுக்கத்துடனும்கூடிய துர்ப்பலப் பெண்கூட்டமே என் ஸேனை; இது டம்பப் பேச்சல்ல; என் வாயிலிருந்து வருவது முழு தத்வம். இத்தனை ப்ரபாவத்துடன் சூலபாணி முதலியவரை ஜயித்து அடிமைகொண்ட நானே ஸங்கல்பஸித்தோதயன்; ஸ்வயம்புவாய் நினைத்த மாத்ரத்தால் கிளம்புகிறவன். இந்த ஶ்லோக ரஸங்களை அளவிட முடியாது; எண்ண முடியாது. 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பர். அது எனக்கே தகும். 'த்ருணமேவாஸ்த்ரம்' என்று ராமன் விஷயத்தில் ஒரு துரும்பு அவரால் காகாஸுரன் பேரில் அஸ்த்ரமாக எறியப்பட்டு அவனை மூன்று லோகங்களிலும் விரட்டி யடித்தது என்று அவர் பெருமையைப் புகழ்வர். 'ராம: ஶஸ்த்ரப்ருதாமஹம்' என்று கண்ணன் கீதையில் அவரைப் புகழ்ந்தார். என் பாணத்தால் அவர் அடிபட்டு ஸீதையைப் பிரிந்தபொழுது ஓயாமல் கதறினது உலகம் அறியும். 'கரும்பு' என்னும் பதத்தை அங்கத்தின் முதலில் வைத்தது ரஸம். இந்த அங்கம் முழுவதும் காமாதிகளின் ஆர்ப்பாடம். காமன் வில் கரும்பைப்போல் மதுரரஸம் ஒழுகுவது. கருப்பங்கழி வளைக்கத் தொடங்கும்போதே முறிந்துவிடும். (ஸம்ஸ்க்ருதம்) 'என் வில் அதிம்ருதுவானது, வளைக்கையிலே முறியக்கூடியது' என்று வளைத்து அபிநயம் செய்து காட்டுகிறான். எப்படி துரும்பு அஸ்த்ரமானது ராமன் மஹிமையோ, அப்படியே இக் கரும்பும் என்னுடைய முறியா வில்லானது என் மஹிமை. 'இது யந்தா' இந்த என் தநுஸ்ஸை வைத்துக்கொண்டு

மேருவைத் தநுஸாக உடைய சூலபாணியை ஜயித்தேன். நெருப்புக் கண்ணாகிய அவர் நெற்றிக் கண்ணை ஶ்ருங்கார சீதள மாக்கினேன். வில்லிலிருந்து தொடுத்து விடும் அம்புகள் ‘வாஷாணஶ்ரீ’. இதோ பார் இந்தப் புஷ்பங்களே சரங்கள். ஐந்தே ஐந்தே. பஞ்ச புஷ்ப பாணங்களைக்கொண்டு பஞ்ஜத்வ மென்னும் மரண துல்யமான அவஸ்தையைத் தருவேன். அநங்க தசைகள் பத்தில் பஞ்சத்வம் கடைசி. இப் புஷ்ப சரங்கள் துளைத்துக்கொண்டேயிருக்கும்; கொல்லாது; ‘அமீ’ ‘இதோ இவை’ என்று தொட்டுக் காட்டுகிறான். நாண் கயிறு உண்டோ? புஷ்ப வாஸனைக்காகக் குவியும் வண்டுகளின் கோவைதான் நாண் கயிறு. வண்டுகள் பறந்துகொண்டே யிருக்கும். நிமிஷத்திற்கு நிமிஷம் வரிசையை விட்டு அங்கு மிங்கும் பறக்கும். வில்லை வளைத்து நாணேற்றி அம்பு தொடுக்கையில் நாண் ஒலி உண்டு; அந்த ஹாங்காரம் பயங்கரமாயிருக்கும். இங்கே இந்த வண்டுகளின் ஒலி வீணையிலும் இனிமையாய் மெல்லியதாயிருக்கும். ‘ஶாஹா’. இந்த ஓசை மங்களமானது. ஜோடிகளைச் சேர்க்கும்; விவாஹங்களைக் கடனை செய்யும். என் வில்லின் நாணோசை சண்டை வில்போல் கொலைக்களத்திற்கு ஆரம்பமல்ல. என் ஸேனையில் போர் வீரர்கள் யார்? ஒரு ஆண்பிள்ளை யில்லை. எல்லாரும் பெண்பிள்ளைகள். ‘ஸுவஶா’ என்று பெண்பிள்ளைக்குப் பெயர். ‘பலம்’ என்று ஸேனைக்குப் பெயர். என் பலமெல்லாம் அபலைக ளென்னும் பெண்கள். அபல மென் பலம். பெண்கள் போர்வீர ராவரோ அக்காலத்தில்? ‘ஜந:’ என்பது புல்லிங்கம்; பெண் ஜநங்கள். சப்தம் மட்டும் ஆண்பால். ‘வீரா:’ தொடை நடுங்கி. ‘ஸங்’ பயத்தைக் காட்டிக்கொண்டே யிருந்தால்தான் என் கார்யம் விரைவில் பலிக்கும். கிட்ட நெருங்க நெருங்க அவள் ஓட வேணும். மேலே விழும் கையை உதறவேணும். தடுப்பதே இனிப்பாகும். பய சேஷ்டைகளே இன்பந் தரும். ‘ஸுவஶா ஜந:’ ஒவ்வொரு பெண்ணே என் ஸேனை. நான் ஸேனைக் கூட்டம் சேர்ப்பதேயில்லை. இத்தனை நம்பக்கூடாத ஸங்கதிகளைப் பேசும்பொழுது, இவை பொய்யென்று நினைப்பது யுக்தமானதால், அப்படி சங்கிப்பீரோ என்று சொல்லிக்கொண்டு முழு உண்மையேதான் நான் பேசுவது என்கிறான். இந்தக் காம ரஹஸ்யம் பரதத்வ மென்று வேடிக்கை. ‘தத்வம் வாம் கஶ்யதே’ பரம தத்வ ரஹஸ்யமே பேசுகிறேன். பொய்யே இல்லை. ‘ஸோஹம்’. வேதாந்தங்களில் ஸோஹம் என்பதைப்போலல்ல இவன் பேசும் ஸோஹம். அவனென்றும் ஸர்வேஶ்வரன்; மத்ப்ரகாரகமாக (நான் என்னு மோர் ப்ரகாரத்துடன்) இருக்கிறான். அவனல்லால் நான் என்பவனே இல்லை. ‘நின்னலா லிலேன் காண்’. அவனலால் தனிமையாக நான் என்பது ஏது? அவன் நிழல்போல் நான். வஸ்து வில்லாமல் சாயை தனித்திருக்குமோ? நானென்பதும் அவனுள் அடங்கி ஒடுங்கியதே. இந்தக் காமன் ‘ஸ:’ என்பது; தன்னையே சொல்லுகிறது. அந்தர்யாமியான பரமாத்மாவைச் சொல்லுவதல்ல.

'நானே நான்' என்று இவன் பேசுவது. முன்பு வர்ணித்த மஹா ப்ரபாவனுகிய நானே நான். 'தானே லெம்பெருமான் அவனென்ருகி நின்ருெழிந்தான்' என்று சடகோபன் பாடுவதுபோல் அல்ல இவனுடைய 'ஸோஹம்' என்ற பாட்டு. 'ஸ ஏவாஹம்' 'அஹம் அஹம்' என்று இவன் டம்பம். 'ஶம்புமுகா:' முதலியவர்களை வென்றவன். 'வேதங்களை யொலிக்கும் நான்கு நாக்குகள் ஸரஸ்வதி தேவியைத் தாங்குகின்றன. கண்ண னென்னும் பரதத்வமும் கோபீ ஜநத்திற்கு இட்டது கட்டளையாயிற்று. 'முதலியவர்' என்றதால், முதல் அங்கத்தில் கூறிய மற்ற இரண்டு மூர்த்திகளையும் கொள்ளலாம். 'ஸங்கல்பவிஜோதய:'. விஷய விரக்தியோடு பகவானை ஆராதித்து முக்தி ஸங்கல்ப ஸூர்யன் உதிப்பதற்கு நான்தான் நேரெதிரி. ஸங்கல்ப ஸூர்யோதயத்திற்கு எதிரி ஸங்கல்ப வித்தோதயனுன நானே. நினைத்த மாத்ரத்தில் தோன்றுகிறவன் நான். 'ஸம்பவாமி ஆத்மமாயயா' என்ருர் கண்ணன். 'என் இச்சா மாத்ரத்தால் என் ஸங்கல்ப மாத்ரத்தால் நான் ஆவிர்ப்பாவம் செய்கிறேன்' என்ருர் கண்ணன். காம னென்பது இச்சையே. இச்சையால் மட்டும் ஏற்படுவது காமத்தின் ஸ்வரூபம். 'ஸங்கல்பயோநி' என்று மந்மதனுக்குப் பெயர்.

"त्वयि संभृतशस्त्रास्त्रे सहाये मम संस्थिते ।
महता पश्य मोहेन विश्वमेकातपत्रितम् ॥"

தோழா! வஸந்தா! மன்னிக்கவேணும். நான் ஒருவனே 'நான்' என்றும், எல்லாம் என்னுடையதென்றும் பெருமை பேசினேன்; அது தப்பு. உன் பலமும் சேர்ந்து என் பலம். என் பலம் மட்டுமல்ல. வஸந்த புஷ்பங்கள் தானே என் பாணங்கள். வஸந்த ருதுவான நீ தானே எனக்குப் புஷ்ப பாணங்களை ஸம்பாரம் செய்து என் அம்பறுத் தூணியை நிரப்பிக்கொண்டே யிருக்கவேணும். கரன் வதத்தை வர்ணிக்கும்பொழுது ராமனை அஸஹாய சூர ரென்பர். நான் அஸஹாய னல்ல. நான் வஸந்த ஸஹாயன். 'ஸஹாயமேகம் மதுமேவ லப்த்வா' என்ருன் காமன் குமாரஸம்பவத்தில். உன்னேடு என்னை அத்வைதமாக்கி, உன் பெருமையையும் சேர்த்து என் பெருமையாகப் பேசினேன். சஸ்த்ராஸ்த்ர ஸம்பாரங்களுடன் நீ என் ஸஹாயனுக நிற்கும்பொழுது, புவநம் முழுவதும் எங்கும் வ்யாபிக்கும் ஒரு மோஹ விருளால் (மஹாமோஹ னென்னும் நம் அரசனுல்) ஒரு குடை நிழலில் ஏகராஜ்யமாகக் கொண்டு வரப்பட்டு விட்டதைப் பார். 'மஹதா மோஹேந' இங்கே சேர்த்தும் பிரித்தும் பொருள். சேர்த்தால் மஹா மோஹன். பிரித்தபடியே வைத்துக்கொண்டால், புவநம் முழுதும் சூழும் பெரும் மோஹ மயக்கம். 'ஸம்ஸ்திதே' என்பதற்கு 'ம்ருதே' என்றும் பொருள். இவள் வாக்கில் சனியனுக அசுபப் பொருளுடைய

வார்த்தை படுகிறது. விவேகி ஸஹாயத்தால் முமுக்ஷுவிடம் இவர்கள் தோற்று அழிவது ஸூசிக்கப்படுகிறது.

வஸந்தன் :—என்ன சொல்வது? காமனல்லவோ நீ?

"कामं कामं कामपि सिद्धि करणैः स्वैः कारं कारं कर्म निषिद्धं विहितं वा ।
न्यस्यन्ति त्वय्यद्भुतसीम्नि प्रतिबुद्धाः कामोऽकार्षीन्मन्युरकार्षीदिति नाम ॥"

தங்களுக்கு வேண்டிய அந்தந்த ப்ரயோஜநத்தை இச்சித்து இச்சித்துத் தங்கள் கர்ம ஞாநேந்த்ரியங்களால் நல்வினைகளோ தீவினைகளோ செய்து செய்து, அத்புதங்களுக்கெல்லாம் எல்லையான உன்னிடம் விவேகிகளான வைதிகர்களும் 'காமன் செய்வித்தான், க்ரோதன் செய்வித்தான்' என்று ஜபித்துக்கொண்டு அர்ப்பணம் (த்யாகம்) செய்கிறார்கள். ஸ்ராவண திநத்தில் வேதாரம்பத்திற்கு முன் ததங்கமாக "காமோ காஷீந்நு மந்யுரகாஷீத்' என்று செய்யும் ஜபத்திலிருந்தே நாங்கள் என்னென்ன செய்கைகள்—அநிஷித்த காம்யமோ நிஷித்த காம்யமோ—செய்தோமோ அவையெல்லாம் 'காமன் செய்வித்தான், கோபம் செய்வித்தான்' என்று வைதிக விவேகிகளே காம கோபரிடம் காரயித்ருவத்தை ஸமர்ப்பணம் செய்கிறார்கள். பகவானிடம் ஸமர்ப்பிப்பதுபோல உன்னிடமும் கோபனிடமும் ஸமர்ப்பிக்கிறார்களே! உங்கள் பெருமையை என்ன சொல்வது! காமன் பெருமையைப் புகழ்கையில் முதல் பாதத்தில் சேர்ந்தாற்போல் மூன்று காம சப்தாக்ஷரங்களை அடுக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது. 'ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:' என்பதுபோல் 'காம காம காம' என்று மூன்று காம சப்தாக்ஷர பாடத்தோடு தொடக்கம். சாந்தி பாட ஸ்தாநத்தில் காம பாடம். 'காமம் காமம்' என்பதற்கு 'காமயித்வா காமயித்வா' [இச்சித்து இச்சித்து] என்பது பொருள். வ்யாகரணத்தில் 'ணமுல்' என்பர். ஸ்வப்நத்தில் 'காமம் காமம் வ்யாவ்ருஷோ நிர்மிமாண:' என்ற ஶ்ருதியில் 'பகவான் இச்சித்து இச்சித்து நிர்மாணம் செய்கிறான்' என்று பொருள்பட, ணமுல் ப்ரயோகமென்று ஸாராவளீ. 'கரணை: ஸ்வை:'—செய்ததெல்லாம் அவர்கள் தேஹேந்த்ரியங்களே. ஆயினும் நீயே செய்வித்தாய். உன் தோழன் கோபன் செய்வித்தானென்று கீர்த்தியை உன்னிடம் ஸமர்ப்பிக்கிறார்கள். 'காரம் காரம்'—இங்கும் 'ணமுல்'. க்ருத்வா க்ருத்வா [செய்து செய்து]. எது செய்தாலும் செய்ததையெல்லாம் 'யத்கரோஷி யதஶ்நாஸி' என்று பகவான் 'எதெது செய்தாலும் அதையெல்லாம்' என்றார். அதுபோல இங்கு இரட்டித்துப் பேசுவதால், எல்லாச் செய்கைகளுமென்று வ்யாப்திப் பொருள் கிடைக்கிறது. காம்ய கர்மங்களைத்தான் காமன் செய்வித்தானென்று பேசலாம். நிஷித்த காம்யங்களையும் விஹித காம்யங்களையும் காமன் செய்வித்தானென்றேதான் சொல்லவேணும். நிஷித்த கர்மங்கள் மட்டுமல்ல

அபிஷித்த விஹித காம்யங்களும் உன்னிடம் த்யாகம் செய்வர். ருது கமநாதிகளும் காம ப்ரயுக்த மாகலாம். ‘ந்யஸ்யந்தி த்வயி’—ந்யாஸம் என்பதற்கு த்யாகம் அர்ப்பண மென்பது பொருள். க்ருஷ்ணார்ப்பணம் போய்க் காமதேவார்ப்பண மாயிற்றென்று ரஸம். ‘[illegible]’ என்றது ‘[illegible]’ என்று மாறிற்று. நீ காமக் கடவுள். ‘ஆஶ்சர்யஶீல’—அத்புதங்களுக் கெல்லாம் நீயே எல்லை. இப்படி அர்ப்பணம் செய்பவர் மூட ஜநங்களல்ல; ஞானிகளான வைதிகர்களே. ‘த்வயி’ [உன்னிடமே] என்னலாமோ? காமன் மந்யு என்ற இருவரிட மல்லவோ த்யாகம் செய்கிறார்களென்று ஆக்ஷேபிப்பது யுக்தமல்ல. நீயே தான் ‘மந்யு’ எனும் க்ரோதன். ‘காம வஶ: க்ரோத வஶ:’ என்கிற கீதையைக் கவனிக்க. காமனெனும் ஆசையைத் தடுத்தால் அவ்வாசையே தடுப்பவர்பேரில் கோபமாகப் பரிணமிக்கிறது. ‘பகவாநேவ அகார்ஷீத்’ என்பர். அந்த ஸ்தாநத்தில் ‘காமோऽகார்ஷீத், மந்யுரகார்ஷீத்’ என்று ஜபம். ‘நான் செய்யவில்லை, ஈஶ்வரன் செய்தான், செய்வித்தான்’ என்பர். அதற்குப் பதிலாக ‘நான் செய்யவில்லை; காமன் செய்தான், கோபன் செய்தான்’ என்று ஜபம். உன் விஷயத்தில் ஸஹஸ்ர ஆவ்ருத்தி. ஸாத்விக த்யாகத்தில் ஆவ்ருத்தி யேது? ‘நாம’ என்பது உலகமறிந்த ப்ரஸித்தியைக் காட்டுகிறது.

முக்கண்ணர் முதலியவரோடு உன் பராக்ரமப் போர் விளையாட்டு. மஹேந்த்ர பவநங்கள் நீ யதேச்சமாய் ஸஞ்சரிக்கு மிடம். கடல் சூழ்ந்த இப்புவநம் உன் உத்யாநத் தோட்டம். நீயோ காந்தி ஸமுத்ரம்; உன் மேனியில் லாவண்ய மலைத்த வண்ணமே. உன்னை எப்படித்தான் வர்ணிப்பது?

[தொடரும்]

தூசியில் நடந்த வைபவம்

நடந்த ஸபாநுஹு தைமீ 12உ செவ்வாய்க்கிழமை ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்வத்ஸர திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஸ்ரீ ஆதிவன் சடகோப மஹாதேசிகனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட சடகோபபுரம் என்னப்பட்ட தூசி அக்ரஹாரத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடி ஸம்பந்தப்பட்ட ஆஸ்திகர்களால் ஷை க்ராமத்திலுள்ள ஸ்ரீ ஸந்தாநவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ பெருமாள் தாயார் ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் முதல் ஆழ்வாராசார்யார் இவர்களுக்குத் திருமஞ்சநம் ஆஸ்தாநம் சாத்துமுறை ஸம்பாவனைகள் விசேஷமாக நடந்தன. தவிர அவரவர்கள் க்ருகங்களிலும் சாத்துமுறை ஸம்பாவனைகள் ததீயாராதனைகள் விசேஷமாக நடந்து எல்லாரும் ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹத்துக்கு பாத்ரர்களாய்த் தந்யமானார்கள்.

சேட்லூர், ஸ்ரீநிவாஸராகவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

குசல ப்ரார்த்தநம்

[ஸ்ரீ. உபய. திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி,
க்யூரேடர், ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட், திருப்பதி]

நாளது ஸ்வபாநு ௵ தை ௴ 12௳ ஸ்ரீரங்கத்தில், இப்போது 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோபதீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில், ததீயாராதநத்திற்குப் பிறகு ஸாயங்காலம் கூடின மஹாகோஷ்டியில் ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வித வேதாந்த வித்வத் ஸபை சிர காலம் அவிச்சிந்நமாய் நடந்து வரும்படி தாம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ப்ரார்த்திப்பதாகத் திருவாய் மலர்ந்தருளி, அநந்தரம் சில வார்த்தைகள் சொல்லும்படி ஸ்ரீ. உ. வே. புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியையும் அடியேனையும் நியமிக்கும்படியிருந்தது. அந்த நியமநப்படி ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி, ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் அமைந்திருக்கும் ஆசார்ய லக்ஷண பூர்த்தியை விஶதமாக உபபாதித்து முடித்தவாறே, ஸம்ஸ்க்ருதத்தில் அடியேன் இரண்டொரு வார்த்தைகள் பேசினேன். அப்போது மிக மிகச் சுருக்கமாகப் பேசின விஷயத்தை இங்குக் கொஞ்சம் விவரிக்க உத்தேசிக்கிறேன்.

ஸ்ரீ வரதனை ஸ்தோத்ரம் பண்ணப் புகுந்த தேசிகன் 'கோவி காருண்யராஶி:' என்று கருணாரூபமாகவே அநுஸந்தித்தார். இது ப்ரதிஜ்ஞை. இதை உபபாதிக்க வேணும். அதற்காக 'விஶ்வமவனி ஸீம்நா வஹ்நிவாந்' என்றார். கோடீஶ்வரனான ஒருவனைப் பார்த்து, 'இவனுக்குப் பத்து ரூபாய் உண்டு' என்றால், நிஶ்சயமாய் அவன் கோபிப்பான். மிகப் பெரிய ஐஶ்வர்யமுள்ளவனைச் சிறிய ஒரு வஸ்துவுக்கு அதிபதியாகக் கூறுவது அவனது பெருமையைக் குறைத்துக் கூறுவதாகும். இதற்கு ஒருவன் இசையான். அகிலஹேய ப்ரத்யநீக கல்யாண குணைகதாநனான நம் வரத ப்ரபுவோ அதையும் பெருமையாகவே கருதுவன். தான் ஸர்வ லோகங்களுக்கும் ஓர் அத்விதீய நாதனாய் இருந்து வைத்தும், 'ஹஸ்திகிரி நாதன்' என்ற பெயரை ஏற்பன். அவ்விதமாயிற்று அவனதருள். இதுவே 'கச்சிநகரத்திகிரி இடமுடைய வருளாளர்' என்று மற்றோரிடத்தில் பேசப்பட்டது.

இன்னமொரு விஷயம். இவன் ஸத்ய ஸங்கல்பன். 'இந்தப் பொருள் இந்தக் குணம் உடையது' என்று ஸ்ருஷ்டி காலத்தில் ஸங்கல்பிக்கிறான். அது அவ்விதமே யிருக்கும். ஆனால் இவன் சதுர்முகன் வேள்வியில் தானே ஹவ்யவாஹன் (அக்நி) ஆனான். ஹவ்யவாஹனுக்குச் சிவப்பு உருவம். இந்த ஹவ்யவாஹனோ ஶ்யாமளன். தன்னைச் சார்ந்தவர்களை த்ருப்தி செய்யத் தன் ஸங்கல்பத்தையும் மாற்றிக் கொள்கிறான். அவ்வளவு கருணை. "வஹ்நியோ தேஹஸாரமஸவநவேத்யாம் ஶ்யாமளோ ஹவ்யவாஹ:"

இத்தகைய பெருங் கருணையும் ஏதோ ஒரு காரணத்தால் பயன் படாமற் போகுமோ வென்று ஸந்தேஹிக்க வேண்டாம். அகல கில்லே னிறையுமென் றலர்மேல் மங்கை யுறை மார்ப னன்றோ அவன்? 'கமலாஜநயிகந்யா வக்ஷஸி கமலாவீ.'

ஸ்ரீதேசிகனுடைய லலிதமான காவ்யங்களிலும், பதம் பதமாகக் கவனித்தால், ஆழ்ந்த பொருள்கள் அடைந்து கிடக்கின்றன என்றார் மதாந்தராவலம்பியான ஒரு பெரியார். ஸ்ரீரங்க ப்ருத்வீச சரண த்ராணத்தைத் தலையில் தாங்குமவர்களின் திருவடித் தூள் 'புவநத்ராண' மென்றார் தேசிகன் ரக்ஷகமான வஸ்து தன் பெருமையைக் காட்டிலும் அதிக பெருமையைத் தன்னை யடைந்தவர்களுக்குக் கொடுக்கின்றதென்று ஓர் உயர்ந்த குணத்தை வ்யஞ்ஜிப்பித்தார்.

நம்முடைய ஆசார்யர்களில் ஒவ்வொருவரும், பரம புருஷார்த்தத்தையும் அதன் உபாயத்தையும் அறிவிக்கும் ப்ரமாண ஸ்ரேஷ்டங்களான வேதங்களின் தாத்பர்யங்களைச் செவ்வையாய் அறிந்துரைக்கப் பெரும் பாடு பட்டிருக்கின்றனர். அவர்களைப் பின்பற்றி மிகுந்த கவனத்தோடு ஊன்றி நோக்கினால், அவர்கள் விவரிக்காத இடங்களிலும் அபூர்வமான அர்த்தங்கள் புலப்படும்.

"மடசீஹதேஷு குருஷு ஆடிக்யா ஸஹ ஜாயயா உஷஸ்திர்ஹ சாக்ராயண: இப்யக்ராமே ப்ரத்ராணக உவாஸ"

என்று உஷஷ்தி கதையை உபநிஷத் ஆரம்பிக்கிறது. எழுவாய் எனப்படும் கர்த்ரு வாசக பதம் வாக்யத்தின் ஆரம்பத்தில் இருப்பது வழக்கம். இவ்விடத்தில் அது மாறி நிற்கிறது. அந்த ஸ்வாரஸ்யத்தை இங்குக் கவனிக்கவேணும். எதிர் பாராமல் திடீரென்று பெய்த கல் மழையினால் குருதேசம் முழுவதுமே பாழாய்விட்டது. 'குருஷு மடசீஹதேஷு' என்று சொல்லலாம். அதை விட்டு வேறு க்ரமத்தைப் பற்றியது இவ்வர்த்தத்தை ஸூசநம் செய்வதற்காக. ஜனங்களில் ஒவ்வொருவரும் அடிபட்டு விழுந்து கிடந்தனர். மற்றொருவர் என்னவானார் என்பது மற்றொருவருக்குத் தெரியாது. பிறகு நாழிகையாக ஆக, முதலில் ப்ரஜ்ஞை யுற்றவர் மற்றவரைத் தேடிக் கண்டு பிடித்துப் பிழைத்திருந்தவர்களை எழுப்பினர். இவ்விதமாக முதலில் எழுந்தாள் உஷஸ்தி மஹர்ஷியின் பத்நி. ஸந்ததியை உத்தேசித்து இவர் விவாஹம் செய்துகொண்டார். அதனால் 'ஜாயா' என்றது. 'ஹாயநா' என்றிவ்விதம் கூறாமல்; விவாஹம் நடந்தும் நாளாகவில்லை. இந்தப் பெண் இன்னும் பெரியவ ளாகவில்லை. 'ஆடிகீ' ஸ்த்ரீ லக்ஷணம் உண்டாகாதவள். ஆயினும் ஔபாஸநம் முதலிய க்ருஹஸ்த தர்மம் நடைபெறுவதற்காகத் தம்பதிகளாக வஸித்தார்கள். இவளுக்கு ஸ்மரணம் வந்ததும் பர்த்தாவைத் தேடி எழுப்பினாள். பிறகு அவர் குரு தேசத்தில் ஒரு விதத்திலும் ஜீவநோபாயம் கிடைப்பது அரிது என்று எண்ணி, மற்றொரு தேசத்து அரசனிடம் சென்று பொருள் பெற்றுக் குடும்ப

வாழ்க்கையை நடத்த உத்தேசித்து ஜாயையுடன் புறப்பட்டுச் சென்றார் கல்மாரியால் துன்புற்றார். வழி நடை வேறு. ஸூர்யன் அஸ்தமித்து இருட்டாகிவிட்டது. அதற்குமேல் ஓரடிகூட எடுத்து வைக்க இயலாது ஆகையால் அஸ்தமித்த இடமான ஒரு க்ராமத்தில் வஸிக்கவேண்டியதாயிற்று. அப்படியே வஸித்தார். 'உஷஸ்திர் ஹ சாக்ராயண உவாஸ' என்ன பொருத்தமின்மை! அந்த மஹர்ஷி இந்த க்ராமத்தில். வெகு அழகு! அங்கு வாஸமும் எப்படி? 'ஆட்ணக:' அசக்தியால் கால் பின்னிக்கொள்கிறது. 'அடகத்யாம் மதள' என்ற தாது. கடைசியில் 'க' என்று ஒரு ப்ரத்யயம். 'ஸஞ்ஜ்ஞாயாம் கந்' என்பார்கள். க்ருஹஸ்தாஶ்ரம தர்மத்தில் நோக்குள்ளவராதலின் இவ்வளவு ஸங்கடத்தையும் ஸஹித்துப் போந்தார் இவர். என்றிவ்விதம் ஆரம்பித்து, மேலும் இதற்குத் தக்கவாறு கதை கூறப்படுகிறது.

நுணுக்கமான இவ்வார்த்தமெல்லாம் ஸம்ஸ்க்ருதத்தை நாம் செவ்வையாக அப்யஸிக்காவிடில் எப்படி அறிய முடியும்? ஆகையால் லௌகிக வ்யவஹாரங்கள் மற்ற விஷயங்கள் எல்லாமே வேறு பாஷைகளாலேயே நடைபெறக் கூடுமாகிலும், மேற்சொன்ன விதமான ஸூக்ஷ்மார்த்தங்கள் ஸாதாரணமாக க்ரஹிக்கக் கூடியனவல்லவாகையால், ஸம்ஸ்க்ருத பாஷா பரிசயம் நமக்கு மிகவும் அவஶ்யம். இதற்கு முக்ய ஸாதநமாக மஹா கலாஶாலா ப்ரதிஷ்டாபநம் முதலிய அநந்ய துஷ்கரங்களான பெருங்கார்யங்களை நம் அழகியசிங்கர் செய்தருளியிருக்கிறார் இப்போது நாம் ப்ரார்த்திக்கவேண்டியது.

'ஜயது ஸுபகம் ந: கோபி காருண்யராஶி:'

என்பது. ஒரே வாக்யத்திற்கு ப்ரகரணத்தை ஒட்டி வெவ்வேறு பொருள் கொள்வது ந்யாய்யமென்று ஸ்ரீ தேசிகனே ஈசாவாஸ்ய உபநிஷத்தில் 'அக்நே நய' என்ற மந்த்ர வ்யாக்யாநத்தில் ஸாதித்தார். ஆகையால் இந்த ப்ரகரணத்தில் குஶலம் இருக்கும்படி நாம் யோஜிக்க வேணும். ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருக்கவேணும். வித்யார்த்திகளுக்கு உபாத்யாயர்களிடத்தில் பக்தியும், உபாத்யாயர்களுக்கு வித்யார்த்திகளிடத்தில் வாத்ஸல்யமும் மிகுந்து, கலாசாலை அபிவ்ருத்தியாகி ஶாஶ்வதமாய் நடக்கவேணும். மேல் மேல் ஸ்ரீ பாஷ்யாதிகாரிகளின் எண்ணிக்கை வளர்ந்து, அத்புதமாக விஷய சர்ச்சை செய்ய அவகாஶம்கொடுக்கும் ஸ்ரீமாலோல வித்வத் ஸபை ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் நிரந்தரம் நடக்கவேணும். ஸ்ரீ ஸந்நிதியில் நியத கைங்கர்யங்களில் அந்வயித்தும் அந்வயிக்காமலும் உள்ள ஸர்வரும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், தச்சரணாரவிந்த கைங்கர்ய துரந்தரரான ஸ்ரீ அழகியசிங்கர், இவர்கள் திருவுள்ள உகப்பே பரமபலம் என்னும் தத்வார்த்தத்தை உணர்ந்து, வைமத்ய லேசமில்லாமலும், பரிவாத பைசுந்யாதிகளுக்கு ஈஷத்தும் இடங்கொடாமலும் இருந்து, ஸ்ரீமதாஸ்தாநத்தைப் பூலோக வைகுண்டமாக்கிப் பேரானந்தம் விளைவிக்கவேணும். இந்தக் குஶலத்தை யெல்லாம் பேரருளாளன் தந்தருளவேணும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உண்மை வைணவன்

—

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A.,L.T. வித்வான், திருவையாறு]

[ஸம்புடம் 3 : ஸஞ்சிகை 2, பக்கம் 54-ன் தொடர்ச்சி]

மந்தாகினியின் தூய உள்ளத்தில் புதியதோர் புயல் உண்டாயிற்று. எதிர்பாராத முறையில் வைதிக விஷயங்களில் அன்பும் பற்றும் உண்டானதுடன் அல்லாமல், கருணாகரனிடம் ஓர் எல்லையற்ற பாசம் முளைவிட்டுத் தழைப்பதை உணர்ந்தாள். 'இது தான் ஆசார்ய பக்தி என்பதோ?' என்று நினைத்து ஸமாதானம் செய்துகொண்டாள். கருணாகரன் இல்லாவிடில் உலகே பாழாகத் தோன்றும் போலிருந்தது. ஆங்கில தமிழ் தினசரிப் பத்ரிகைகளில் கருணாகரனது சிறந்த அறிவும், ஆசாராநுஷ்டாநங்களும், ப்ரவசந ஸாமர்த்யமும், இனிமையும் வெளிவந்துகொண்டிருந்தன. பத்மநாபாசார்யர் துடிதுடித்தார். "என்ன காலம்! '**संघेशक्तिः कलौ युगे**' என்பது ஸத்யமே. நாலு பசங்கள் சேர்ந்துகொண்டு உபந்யாஸங்களாம்; சீர்திருத்தமாம்; உலகத்தையே தலைகீழாய்ப் புரட்டுகிறார்கள். அதற்கு க்ஷுத்ர வைதிகர்கள் ஸம்மதித்து ஒத்து ஊதுகிறார்கள். நல்ல காலம்!" என்று முணுமுணுத்தார். ஐயோ அஸூயையே! உன் பராக்ரமமே பராக்ரமம். பண்டித பாமர விபாகமில்லாமல் விஷயீகரித்து ஆட்டிவைக்கிறாய். "**निरवधिगुणग्रामे रामे**" என்று ஸ்வாமி தேசிகனால் கொண்டாடப்பட்டவனாயிற்றே நீ! பத்மநாபாசார்யர் அஸூயா தாஸரானார். திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தஸகனது திவ்ய ஸேவையைக் கண்டு மகிழ்ந்துவிட்டுக் கருணாகரனும் மந்தாகினியும் திவ்யாலயத்தின் வாசலில் நின்றுகொண்டிருந்தனர். "ஏன் மயிலாப்பூருக்குப் புறப்படவேண்டியது தானே; வண்டியைக் கூப்பிடட்டுமா?" என்றார் ஸ்வாமி. மந்தாகினி புன்சிரிப்புடன், "இன்று நடக்கலாம் என்று பார்க்கிறேன். குளிர்காலம் போய்விட்டது. உடம்பில் தாபமும் ஏற்பட்டிருக்கிறது. மெதுவாகக் கடற்கரைக் காற்றை உட்கொண்டு போகலாமே. மணியும் ஏழரைதான் ஆகிறது" என்றாள். கருணாகரன் சற்று யோசித்து, "ஆஹா திவ்யமாய் நடக்கலாம்" என்றார். மந்தாகினி "ஏதோ யோசித்துப் பதில் ஸாதிப்பதைப் பார்த்தால் திருவுள்ளமில்லைபோல் இருக்கிறது" என்றாள். கருணாகரன் "இல்லை; இல்லை; ஸர்வதாயில்லை. நீ நடந்து வரவேண்டுமே யென்றுதான் ஸ்வல்பம் யோசித்தேன்" என்று புறப்பட்டார்.

இனிய குளிர்ந்த மாலை வேளை. கடற்கரைக் காற்று ஆநந்தமாய் வீசுகிறது. வீசும் மந்தமாருதத்திற்குத் துணையாய்க் குளிர்ந்த நிலவு

புலன்களுக்கு ஆனந்த வெள்ளத்தைத் தெளித்தெழுந்தது. "காலே வலிக்கிறது. சற்று மணலில் உட்காரலாமா?" என்றாள் மந்தாகினி. நிலவில் அவள் திவ்யாங்கனைபோல் இருந்தாள். மெலிந்து உயர்ந்த வடிவம். கறுத்து நீண்டு வெகு ஶ்ரத்தையுடன் பின்னிக் கொண்டை யிடப்பெற்ற குழல். மருண்ட அழகிய கண்கள். இனிய புன்முறுவல். கருணாகரன் அன்புடன் "ஆத்திற்கே போய்விடலாமே. உட்கார்ந்தால் மறுபடி எழுந்து நடப்பது ஶ்ரமம்" என்றார். ஓர் படகின் நிழலில் மந்தாகினி உட்கார்ந்து விட்டாள். கருணாகரனும் வேறு வழியற்று உட்கார்ந்தார். மந்தாகினியின் முகம் மிகவும் வாட்டமுற்றது. திடீரென்று "நான் நாகரிகமாய் இருக்கிறேனென்று தேவரீர்க்கு வெறுப்பில்லையே" என்றாள்.

கருணா:—ஏன்? நீதான் அதி வைதிகையாய் மாறிவிட்டாயே. வெள்ளைச் சேலைகளைக் காணோம். கட்டியிருப்பது ஆரணி காஞ்சீபுரம் சேலைகள். கோண வகிடு, கனகாம்பரம், டென்னிஸ், பாதரக்ஷை எல்லாம் பறந்துபோய்விட்டதே. மனமார நீ வைதிகையாக மாறிவிட்டாயே.

மந்தா:—இவ்வளவு மாறுதலுக்கும் காரணம் என்ன தெரியுமோ?

கருணா:—ஸ்ரீ பார்த்த ஸகனது திவ்ய ஸங்கல்பமே. ஸந்தேஹ மென்ன.

மந்தா:—ஒரு மநுஷ்ய வ்யாஜமும் அந்த ஸங்கல்பத்திற்கு வேண்டுமே?

கருணா:—[புன்சிரிப்புடன்] நீ வரும் விஷயம் கொஞ்சம் விளங்குகிறது. அபாத்ரமான என்னை ஆகாய மளவும் துதிக்கவா நீ இங்கு உட்கார்ந்தனை?

மந்தா:—[சற்று நேரம் தலைகுனிந்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள். பிறகு வானையும் மதியையும் நோக்கினாள். பரந்த கடலைப் பருகுவாள்போல் பார்த்தாள். காற்றில் கலையும் தன் அளகங்களைச் செவ்வைப் படுத்தியவண்ணம் புன்சிரிப்புடன்] "ஸ்வாமிந் உண்மை பேசுவது கெடுத லல்லவே" என்றாள்.

கருணா:—என்ன மந்தா! விடுகதை விடுகதையாய்ப் பேசுகிறாயே. உண்மை பேசுவதுதான் நமது முதற்கடமை யாயிற்றே.

மந்தா:—[கைகுவித்து] என்று உம்மைக் கரும்பாக்கத்திற் கண்டேனோ அன்றுமுதல் ஓர் த்ருடமான ப்ரீதி என் மனத்தை அலைத்தது. என் வாழ்க்கை முறையைக் கைவிட்டேன். என் மனோபாவங்களை மாற்றிக்கொண்டேன். என் ஆத்மபந்துவைக் கண்டதாகத் தீர்மானித்து விட்டேன். ஸ்வாமி! நான் அபலை. அபலைகளின் ஸ்வாதந்த்ர்யம் அநர்த்த மென்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். என் ஸ்வாதந்த்ர்யம் என் ஆத்மரக்ஷண பர்யந்தம் உதவிற்றென்று பெருமைப்பட்டேன். ஸ்வாமி! தேவரீரே என் ஸர்வ பந்து. என் பரமாசார்யன்.

கருணு :—அதெற்கென்ன மந்தாகினி! இதென்ன அநுஸந்தாநம்! ஸர்வேஶ்வரன் துரும்பைக் கொண்டும் கார்யம் நடத்திக்கொள்கிருன். என் பெருமை என்ன இருக்கிறது ?

மந்தா :—ஸ்வாமி! எல்லையற்ற கல்வி யறிவு கொண்ட தேவரீர், என்னை யறிந்துகொள்ளவில்லையென்று நான் நினைக்க முடியாது. அடியேனை ஸ்வாமியின் சிஷ்யையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கருணு :—மந்தா! இது என்ன விசித்ரம்? உனக்கு—சிறந்த அறிவுவாய்ந்த உனக்கு—நான் எப்படி ஆசார்யகம் செய்ய ஆற்றலுடையேன்? அப்படி யிருந்தபோதிலும், உனக்குச் சில க்ரந்தங்கள் ஆசார்ய பலத்தைக் கொண்டு விசேஷமாய்ப் பாடம் சொல்லி வந்தேனே. இன்னும் சாஸ்த்ர ஸம்மதமாக எந்த நூல்கள் போதிக்கலாமோ அவற்றையும் போதிக்க ஸித்தமாயிருக்கிறேன். ஏன் விசேஷ ப்ரார்த்தனை? நாழிகையோ ஆகிறது. கிளம்பு மந்தா!

மந்தாகினியின் கண்களில் நீர்த்துளிகள் போராடின. தலையைத் திருப்பி அசைத்தவண்ணம் "என்ன நிர்ப்பாக்ய உலகம்! பெண் ஜந்மமே பீடற்ற ஜந்மம். இந்த லோகமே ஆண்களுக்கென்றே ஏற்பட்டதுடன், பரலோகமும் இவ்வாண்களே் இட்ட வழக்குப் போலிருக்கிறது" என்று கண்ணீரைத் துடைத்தவண்ணம் தழுதழுத்த குரலிற் சொன்னுள். கருணுகரன் நடுங்கிவிட்டார். 'பழைய நாகரிக மோஹமும் நாஸ்திக்யமும் திரும்புகின்றனவோ!' என்று ஸந்தேஹப்பட்டார். "மந்தா! என்ன வார்த்தை சொன்னுய்? நீ நொந்துகொள்வது ஸ்வரூபமா? பரந்த இப்பூமண்டலத்தையும் காற்றையும் ஒளியையும் பயிர்களையும் படைத்து, நம்மையும் படைத்து, நம் உடை உண்டி இவைகளுக்காக அரும்பாடுபட்டு உபகரிக்கும் ஆபத்ஸகனையும், அகண்ட தயாநிதியாயும், அகில பந்துவாயும் இருக்கும் ஸ்ரீ அர்ஜுநஸகனை யன்ருே நீ குறை கூறுகிருய். பெண் தன்மை எத்துணை உயர்ந்தது! எத்துணைப் புனிதமானது! எத்துணை ஆற்றல் கொண்டது! 'ஶ்ரியஃ பதி' என்றும் 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' என்றும், ஓர் பெண்ணரசியைத் துணைக் கொண்டேயன்ருே ஸ்ரீபார்த்தஸகன் ஸர்வேஶ்வரனுனது. என்ன வார்த்தை சொன்னுய்? வத்ஸே! இன்று என்ன மனக்கலக்க முனக்கு? என்ருர் கருணுகரன்.

மந்தா :—ஸ்வாமி! மந்த மதியான அடியேனைத் தேவரீர் திருவுள்ளம் பற்ற வேண்டும். என்னுடைய உடலும்.......என்றவுடனே கருணுகரன் திடுக்கிட்டார். மந்தா நிறுத்தவில்லை.

மந்தா :—அன்று வராஹபுராணம் ஸேவிக்குங்கால் ஸ்ரீ பூமிப்பிராட்டியின் ஶ்லோகம் ஸாதித்ததே; ஞாபக மிருக்கிறதா? "**हि शिष्या च दासी च भक्तायत्वयि माधव!**" எனக்கு அந்த நிலைமை வேண்டும். யான் அதைப் பெறுவேனு?

கருணா:—பரம தயாளுவான பார்த்த ஸகனைக் கேள். ஸர்வ ஶக்தன் உன் ப்ரார்த்தனையை அங்கீகரிப்பன். ஸ்ரீ பெரியாழ்வார் திருமகளார் அந்த நிலையை நாடறியப் பெறவில்லையா?

மந்தா:—[வேதனையுடன் சிரித்து] எனக்குத் தேவரீரே ஸர்வ....என்றாள்.

கருணாகரன் 'ஹா! வரதா! வரதா!' என்றார். தலைகுனிந்த மந்தாகினியைப் பார்த்தார். அவருடைய இரக்கமும் அன்பும் கரை புரண்டன. "மந்தாகினீ! வத்ஸே! ஸ்ரீ பார்த்தஸகனது லீலைகள் விசித்ரமானவை. உனக்கு இத்தகைய புத்தி ப்ரதானம் அவன் எதற்காகச் செய்தானோ? உன் அன்பு மிகவும் தூய்மையானது. உன் வடிவழகு மிகவும் உயர்ந்தது. புஷ்பத்தைச் சேற்றிலிட்டுப் புரட்டுவதுபோல் இருக்கிறது நீ என்னை நினைப்பது. உன் அன்பாம் சிந்தாமணி ரத்நத்துக்கு உரியவன் ஶ்ரிய:பதியான பார்த்தஸகனே. ப்ரக்ருதி மண்டலத்தில் எல்லா ஸ்த்ரீகளும் ஆண்டாளாகவே ஆக முடியாது. ஆகையால் உத்தமமான உன் அன்பிற்குத் தக்க ஒரு வரனைப் புருஷோத்தமன் ஸங்கல்பித்திருப்பான். அவனே உனக்குத் தக்க பர்த்தா. உன் வாழ்வு விஜயமடைய அவ்விஜய ஸகனே அருளவேண்டும்" என்று ஸ்ரீ பார்த்தஸாரதியை நோக்கிக் கண்ணீருடன் அஞ்ஜலி செய்தார். மந்தாகினி வேதனையுடன் "ஸ்வாமி! சாஸ்த்ர பாதகமில்லையே! மேலும் என் ப்ரார்த்தனையை மறுப்பதில் தேவரீருக்கு எவ்வளவு லௌகிக பாதகங்கள் உண்டு! நான் தேவரீருக்கு எவ்வளவு காரியங்கள்...." என்று சொல்லுமுன் கருணாகரன் புன்சிரிப்புடன் குறுக்கிட்டு, "சாஸ்த்ரம் ஸம்மதிக்காது. லௌகிக பாதகங்கள் என்கிறாய். வத்ஸே! எல்லாம் இந்திரையாள் கேள்வனின் ஸங்கல்பமே. எது நடந்தாலும் எனக்குக் கவலையில்லை. ஸர்வ சக்தனான அவனது திவ்ய ஸங்கல்பத்தின்படி நடப்பதெல்லாம் பரமஹிதமே. ஹிதமேயன்றி வேறல்ல. நீயும் நானும் அதை மாற்றி அமைக்க முயல்வது, துரும்பு குலாசலத்தைப் புரட்டித்தள்ள நினைத்ததாகும். குழந்தாய்! உன் வயதுக்கு ஏறக்குறைய ஸமானமான குழந்தை எனக்கு இருக்கிறது. உன் ஆத்மா மிகவும் உதாரமானது. நிஷ்களங்கமான உன் மனத்தில் முட்செடிபோன்ற எண்ணங்களைப் படரவிடாதே. அம்மா! மந்தா! எழுந்திரு. உன் அழகிய மனமான ப்ருந்தாவநத்தில் முளைத்தெழும் இந்த விஷமூலிகையைப் பிடுங்கி எறி. வத்ஸே! உனக்கு ஸ்ரீ பார்த்தஸாரதி பலம் அளிக்கட்டும். அவன் துணை செய்வான் எழுந்திரு" என்றார். மந்தாகினி தலை குனிந்தவண்ணம் எழுந்தாள். தாயைத் தொடர்ந்த சேயைப்போல் மெதுவாய் நடந்தாள். "ஆஹா இவர் உள்ளம் என்ன குல பர்வதமா? உறுதிக் கோட்டையா?" என்று வியந்தாள். மனதிற் பல முறை நமஸ்கரித்தாள். க்ஷமிக்கவேண்டும் என்று புலம்பிப் பின் சென்றாள்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஒரு திருத்தம்

[புதுக்கோட்டை ஸ்ரீ. உப. வி. ஸ்ரீநிவாஸையங்கார், மாடுங்கா, பம்பாய்]

சென்ற மாதத்து ஸஞ்சிகையில் "ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை" என்னும் வ்யாஸத்தில் 48, 49-ம் பக்கங்களில், 'உபலக்ஷணம்' என்பதற்கு ஶாகா சந்த்ரனைக் காட்டி "அத்வைத ஸித்தாந்தத்தில் இந்த உபலக்ஷணத்தை ஒப்புக்கொள்கிறார்கள்" என்று எழுதியிருந்தோம்.

பிறகு 49-ம் பக்கத்தில் இரண்டாவது பாராவில் "அத்வைதிகள் ஒப்புக் கொண்ட தடஸ்த லக்ஷணத்தை ஒப்புக்கொண்டதோடு, விசேஷண பக்ஷத்தையும் ஒப்புக்கொண்டதால், ப்ரம்ஹம் ஸகுணமென்றால்தான் இரண்டுவித கக்ஷிக்கும் யுக்திக்கும் ஒத்து வருகிறதென்றும், நிர்க்குணமாயிருக்கும் பக்ஷத்தில் 'यतो वा इमानि भूतानि जायन्ते,' 'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' இத்யாதி ஶ்ருதிகளுக்கு விசேஷணமாகச் சொல்லும் அர்த்தமும் யுக்தியும் ஒத்துவரமாட்டாவென்றும் வ்யக்தமாகத் தெரிகிறது" என்று எழுதியிருந்தோம்.

இங்கு "அத்வைதிகள் ஒப்புக்கொண்ட தடஸ்த லக்ஷணத்தை ஒப்பு கொண்டதோடு" என்று தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது. நம் பாஷ்யகாரர் ஒப்புக்கொண்டிருப்பது எப்படியென்றால்:—"यत्रायं सारसः स देवदत्तकेदारः" [எங்கே ஹம்ஸ பக்ஷி இருக்கிறதோ, அது தேவதத்தனின் ஸ்தலம்] என்று தேவதத்தன் ஸ்தலத்தை யறியவேண்டியவருக்குக் காட்டுவதுபோல. இங்கு ஹம்ஸ பக்ஷி ஸ்தலத்திலேயே இருந்தாலுமிருக்கலாம்; போய்விட்டாலும் விடலாம். ஆனால் அறியவேண்டியதென்னவென்றால்: देवदत्तीयं—தேவதத்தனுக்கும் ஸ்தலத்துக்குமுள்ள ஸம்பந்தம். இந்த மாதிரி உபலக்ஷணத்தை நம் பாஷ்யகாரர் திருவுள்ளம் பற்றியிருக்கிறாரேயொழிய, ஶாகா சந்த்ரனைப் போலுள்ள ப்ரமாணத்தை நம் பூர்வாசார்யர்கள் கண்டித்துமிருக்கிறார்கள். கீழ்வரும் அதிகரண ஸாராவளி ஶ்லோகம் இங்கு அத்யந்தம் உபபந்நமே.

"चन्द्रे शाखेव शान्ते महसि तटगतं लक्षणं कारणत्वं
सत्यज्ञानादिवाक्यैरपमृदितगुणन्तद्विभातीति डिम्भाः।
एकत्रार्थे विशेष्ये प्रतिपदनियतावर्ज्यतत्तन्निमित्त-
द्वारा वृत्तिं पदानामिह विदुररुणाद्युक्तिवन्न्यायवृद्धाः॥"

இங்கு தேவதத்தனுக்கும் ஸ்தலத்துக்குமுள்ள ஸம்பந்தம்போல ஜகத்துக்கும் ப்ரம்ஹத்துக்குமுள்ள ஸம்பந்தமும் தெரியவில்லையே என்கிற கேள்விக்கு ஸ்ரீ பாஷ்யத்தில் கூறப்பட்டுள்ளது பின்வருமாறு:—

"तस्मात् यन्मूला जगज्जन्मस्थितिलयाः तद्ब्रह्मेति जन्मस्थितिलयाः स्वनिमित्तोपादानभूतं वस्तु ब्रह्मेति लक्षयन्ति। जगन्निमित्तोपादानताक्षिप्तसर्वज्ञत्व सत्यसङ्कल्पत्वविचित्रशक्तित्वाद्याकारबृहत्वेन प्रतिपन्नं ब्रह्मेति च, जन्मादीनां तथा प्रतिपन्नस्य लक्षणत्वेन नाकारान्तराप्रतिपत्तिरूपानुपपत्तिः॥ इति हि भाष्यम्॥"

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

மூன்றாவது மாலோல ஸதஸ் : கோடியாலம்

நாளது ஸுபாநு வருஷம் தைமீ 6வ (19—1—44) புதன்கிழமை காலையில் ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ் ஸ்ரீரங்கத்திற்கு அருகிலுள்ள கோடியாலம் அக்ரஹாரத்தில், திருச்சி தேவஸ்தாந கமிட்டி ப்ரெஸிடெண்ட் ஸ்ரீமான் வாஸுதேவ அய்யங்கார் பங்களாவில் உபக்ரமிக்கப்பட்டது. அப்போது, ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதே வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸேத்யாதி பிருதாங்கித ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகர்கள் ஷை ஸதஸ்ஸை அலங்கரித்தருளினர். அநேக வித்வான்கள் நாநா தேசத்திலிருந்தும் வந்திருந்தனர். ஏழு நாட்கள் ஷை ஸதஸ்ஸில் வாக்யார்த்தங்கள் நடந்தன. சுமார் 75 வித்வான்களும் அநேக லௌகிக ப்ரபுக்களும் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

12வ (25—1—44) செவ்வாய்க்கிழமை ஸ்ரீரங்கம் தசாவதார ஸந்நிதியில் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் விசேஷ விமர்சத்தோடு நடந்தேறியது. அன்று காலை ஸ்ரீ அழகிய சிங்கர் அபிகமநாராதநம் செய்தருளி, தீர்த்த சடாரி கோஷ்டிக்குப் பிறகு ஸ்ரீபாத தீர்த்தம் ஸாதித்தருளினர். பிறகு ஸ்ரீரங்கம் திருவெவ்வுளூர் புள்ளம் பூதங்குடி முதலிய திவ்ய தேசங்களிலிருந்து வந்த திருமாலை திருப்பரியட்டம் முதலிய ப்ரஸாதங்களால் ஸ்ரீ அழகியசிங்கருக்கு மர்யாதைகள் நடத்தப்பட்டன. பிறகு ஸ்ரீ அழகிய சிங்கருக்கு விசேஷ ஸம்பாவனைகள் நடந்தன. இஜ்யை முடிந்ததும் பாகவதாராதநம் விஜ்ரும்பத்தோடு நடத்தப்பட்டது. அன்று மாலை ஸதஸ்ஸில் ஸ்ரீ அழகியசிங்கர் தமது அரிய சொற்பொழிவுகளால், அந்த ஸதஸ்ஸில் ஈடுபட்ட வித்வான்களிடம் தமது ஸந்தோஷத்தைத் தெரிவித்தருளினர். பிறகு, ஆசார்ய மஹிமையைப்பற்றிப் புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸமும், பண்டித ராஜ ஸ்ரீ உ. வே. திருமலை தாதாசார்ய ஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத உபந்யாஸமும், திருவையாறு ந்யாயோபாத்யாயர் ஸ்ரீ.உ.வே. தி. வீரராகவாசாரியர் உபந்யாஸமும் நடந்தேறின. அநந்தரம் சந்தந தாம்பூல நாளிகேரங்கள் வழங்கப்பட்டு, மாலை ஸதஸ் முடிவுபெற்றது. இரவு டோலோத்ஸவ காலத்தில் வித்வான்களுக்கு மொத்தம் அளிக்கப்பட்ட ஸம்பாவனை ரூ. 1500. வெளியிலிருந்து வந்திருந்த வித்வான்களுக்கு வழிச் செலவும் கொடுக்கப்பட்டது. உபய கலையார்களும் உவந்து வந்திருந்தனர். "ஸுநாவ்ருஜ்ய ப்ரியம் ப்ரூதே" என்கிறபடி ஸ்ரீ அழகிய சிங்கர் வந்த பண்டிதர்களுக்கு ப்ரியத்துடன் ஸம்பாவனை அளித்ததுடன், இனிய சொற்களால் அவர்களின் மனத்தையும் கவர்ந்தருளினர். யாழ்பயில் நூல் நரம்பின் முதிர்சுவையை ஒத்த கண்ணபிரானுக்கு டோலோத்ஸவ காலத்தில் யாழின் இன்னிசையினால் பணிந்தேத்தியவருக்கும் ஸம்பாவனை செய்யப்பட்டு, திருநக்ஷத்ர மஹோத்ஸவம் மங்களமாக முடிவடைந்தது. உள்ளூர் பண்டிதர்களும் ஸந்மானிக்கப்பட்டனர்.

அம். வ. நரஸிம்ஹன், ஸ்ரீ கார்யம்.

(2)

ஸ்ரீ அஹோபில மடம் 38-வது பட்டம் ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்-தில்லஸ்தாநத்தில் நடந்த வைபவம்.

ஸ்ரீ அஹோபிலமட திவ்யாஸ்தாநம் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி திருக்குடந்தை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரோத்ஸவம், ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய தில்லஸ்தாநம் ஸ்ரீ ஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனால், நாளது ஸ்வபாநு தைமீ 24௳ ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நக்ஷத்ரத்தில் தில்லஸ்தாநத்தில் அதி விமர்சையாய்க் கொண்டாடப் பட்டது. உத்ஸவம் 19௳ ப்ராதஃ ஆரம்பிக்கப்பட்டுத் திவ்ய ப்ரபந்த வேதபாராயண க்ரந்த பாராயணங்களுடனும் நடந்தது. பகலிலும் இரவிலும் ததீயாராதநங்கள் ஸம்ப்ரமமாக நடந்தேறின.

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமி, 'ஸத்ஸந்தாநவ்ரஸஞ்ஜாத' என்றபடி ஸ்ரீ அஹோபில மடம் 24-ம் பட்டம் கல்யாணபுரம் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவராஹஶ்ரீ ராமாநுஜ யதீந்த்ரமஹாதேஶிகநு திருவம்சத்தில் திருவவதரித்தவர்; ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கர் அன்பிற்கும் அநுக்ரஹத்திற்கும் அத்யந்தம் பாத்ரமானவர்; ஆநந்தனூ ஆஶ்ரம ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டவர்; ஸ்ரீ அழகியசிங்கரிடமுள்ள அசஞ்சல பக்தியினால் ஆண்டுதோறும் அவிச்சிந்நமாய் அதிஶ்ரத்தையுடன் ஷை. திருநக்ஷத்ரத்தை மிக்க வைபவத்துடன் நடத்திவருகிறார்.

ஸேவை பாராயணங்களுக்கு உள்ளூர் அத்யாபகர்களுடன், பெரும்பாக்கம் திருக்குடந்தை ஸ்ரீரங்கம் கல்யாணபுரம் முதலான ஊர்களிலிருந்தும் ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தனர். சாத்துமறை தினம் (24௳) த்வாதசியானதால், காலை 7 மணிக்குமுன் 'தத்வஸ்வாஸ்த்ரிகேஷி' என ஶிஷ்ய ப்ராப்தமானபடி, ஸ்ரீ அழகியசிங்கரின் ரமணீயமான திருவுருவப் படமும் ஸ்ரீ பாதுகையும், பஹுவித அலங்காரங்களுடனும் வாத்யங்களுடனும் ப்ரபந்த வேத கோஷ்டிகள் சூழ பூர்ண உபசாரங்களுடனும், ரங்கவல்லி தீபம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட திரு வீதியில் எழுந்தருளப்பண்ணப்பட்டன. சாத்துமறை கோஷ்டி விவித வித்வத் ஜந விபூஷிதமான வைஷ்ணவ ஸம்ருத்தமாக இருந்தது. அப்போது, இவ்வுத்ஸவத்தைக் கண்டு களிப்பதற்கு, இவ்வூர்க்கு ஸமீபத்திலுள்ள மற்றும் அநேக ஸ்ரீக்ராமங்களிலிருந்தும் பரிகணிதர்களான பண்டிதர்களும் ஆஸ்திகர்களும் ப்ரபுக்களும் சுமார் 400 ஸ்வாமிகளுக்குமேல் குதூஹலத்துடன் குழுமியிருந்தனர். சித்ராந்நங்களுடனும் பக்ஷ்ய விசேஷங்களுடனும் ததீயாராதநம் ஸம்ப்ரமமாக இனிது நடந்தேறியது. உத்ஸவத்தை ஸேவித்தவர்கள் 'கதிஶேஷநிஷேவணீயக்ஷணா:' என்று ஆநந்த மக்நர்களாயினர்.

T. S. சேஷாத்ரி தாஸ:

---

(3)

ஸ்ரீ அஹோபிலமடம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கருடைய வார்ஷிக மஹாராதநம், பண்ருட்டி.

ஸ்ரீ அஹோபில மடத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப

ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 21-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவம், 21—1—44 முதல் 23—1—44 வரையில் பண்ருட்டி அக்ரஹாரத்தில் மூன்று தினங்கள் வழக்கம்போல் மிகவும் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டது. 21ௗ காலையில் வேத பாராயண அத்யாபகங்கள் க்ரந்த பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன. மூன்றும் நாள் காலையில் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப் படத்திற்கு விசேஷமாய் அலங்காரங்கள் செய்து, அத்யாபக வேத பாராயண வாத்ய கோஷத்துடனும் சத்ர சாமராதிகளுடனும் வீதி உத்ஸவம் மிகவும் ஆச்சர்யமாகவும் அழகாகவும் கம்பீரமாகவும் நடந்தது. பிறகு ஸேவை சாத்துமறை நடந்தது. அன்றிரவு ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹ ரூபமான ஸம்பாவனைகளும் ப்ரஸாதங்களும் எல்லோருக்கும் அளிக்கப்பட்டு மஹோத்ஸவம் பூர்த்தியாயிற்று. பல ஊர்களிலிருந்து வித்வான்கள் எழுந்தருளி, அம்மூன்று தினங்களிலும் அநேக அருமையான உபந்யாஸங்களைச் செய்தருளினார்கள்.

ஒரு சிஷ்யன்.

---

(4)

42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம். பாதூரில் நடந்த வைபவம்

ஷை மஹோத்ஸவமானது பாதூர் அக்ராஹாரத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனு ப்ருந்தாவநத்தில் வழக்கம்போல், நிகழும் ஸ்வபாநு தைமீ 12ௗ செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ஸந்நிதி சிஷ்ய கோடிகளால் நன்கு கொண்டாடப்பட்டது. அன்றை தினம் காலை 8 மணிக்கு ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுருவப் படத்தையும் ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய பாதுகைகளையும் செவ்வனே புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட விமாநத்தில் எழுந்தருளப்பண்ணி, ஸகல பிருதுகளுடனும் மேள தாளங்களுடனும் உபநிஷத்து பாராயணத்துடனும், ஷை அக்ரஹார நான்கு வீதிகளிலும் எழுந்தருளப் பண்ணி, பிறகு ஷை அக்ரஹாரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீஅலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸந்ந வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளப் பண்ண, அங்கு ஸந்நிதியில் மரியாதை ஆயிற்று. பிறகு ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன் மரியாதையும், ப்ருந்தாவநத்தில் தீர்த்த விநியோகமும் ஆயின. ஷை மஹோத்ஸவத்தில் ஸ்ரீ. உ. வே. பாதூர் மணியம் எலி வெங்கடாசாரிய ஸ்வாமியால் அநேக மஹான்களின் த்ரவிய ஸஹாயத்தைக் கொண்டு சுமார் 500 ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநமும் ஏழைகளுக்கு அந்ந தாநமும் நடத்தப்பட்டன.

பிறகு வழக்கம்போல் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப் படத்தை ஸந்நிதியிலிருந்து ஸ்ரீ. உ. வே. பாதூர் எலி P. T. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் திருமாளிகைக்கு எழுந்தருளப்பண்ணிய பிறகு ஷை மஹோத்ஸவம் செவ்வனே நடந்தேறியது.

பிறகு ஸ்ரீ. உ. வே. வித்வான் பாதூர் அநந்தாசாரிய ஸ்வாமியால் 'ஆசார்ய பக்தி' என்னும் விஷயமாகச் சிறந்ததோர் உபந்யாஸம் நடத்தப்பட்டது. ஷை மஹோத்ஸவத்திற்கு வெளியூர்களிலிருந்து ஸந்நிதி ஸம்ப்ரதாய சிஷ்யர்களும் இதர ஆஸ்திகர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள்.

P. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

---

(5)

ஸ்ரீ பரவஸ்து ஸ்வாமியின் நிர்யாணம்.

அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாயத்திற்குச் சென்ற பல ஆண்டுகளாக அரும் பெரும் கைங்கர்யங்கள் செய்துவந்த ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் கிழைச்சேரி பரவஸ்து ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி சென்ற தைமீ 25உ (7—2—44) திங்கட்கிழமையன்று பரமபதித்த விஷயம் தேசிகன் திருவடிகளை ஶோகக்கடலில் ஆழ்த்திவிட்டது. அந்த ஸ்வாமி நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றுகூட அவருடைய ஆப்தர்கள் பலருக்குத் தெரிய அவகாசம் கொடுக்காமலே அந்த நோய் ஸ்வாமியினுடைய நிர்யாணத்தை வெகு சீக்ரத்தில் விளைவித்துவிட்டது. எம்பெருமான் ஸங்கல்பம் இவ்வாறிருக்கும்போது அதற்கு அடியோம் செய்யமாட்டுவது ஒன்றுமில்லையெனினும், இந்தப் பிரிவால் பரிதபிக்க முடியாமலிருக்க வில்லையே! "ஸ்வாமியினுடைய தேசிக பக்தியும், பகவத் விஷய ரஸிக்யமும், சாடுக்திகளும், ஶப்த ஶ்லேஷைகளும் அனைத்தும் இனி நேரில் அனுபவிக்க முடியாதபடி மறைந்து போயினவே" என்று நினைக்கும்போது நெஞ்சம் பதறுகிறது.

ஸ்வாமிக்குப் பால்யம் முதல் காவ்யத்தில் அதிக ருசி உண்டு. கருவிலே திருவுடையராதலால், காவ்யங்கள் உண்டாக்கிய ஶ்ருங்கார ரஸம் முழுவதும் பகவத் விஷயத்தில் திருப்பப்பட்டு, ஸ்வாமி பகவத் பாகவத ப்ரவணராய்ப் போந்தார். வெகு சீக்ரத்தில் இவருள்ளப் பாங்குக்கு மிகவும் உகப்பான ஒரு ஆசார்யருடைய ஸம்பந்தம் கிடைத்தது. நம்மாண்டவன் என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ பரமபரி இத்யாதி தேரழூந்தூர் ஆண்டவன் திருவடிகளில் அந்வயித்து, உபய வேதாந்தங்களையும் அங்கே கற்றார். அவ்வாசார்யர் அருளாலே ந்யஸ்த பரராயும் ஆனார். பிறகு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தபோது ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியுடன் நெருங்கிப் பழகும் பாக்யத்தையும் பெற்றார். ஸம்பூர்ணமான ஶாஸ்த்ர பரிசயமும், தெளிந்த ஸம்ப்ரதாய ஞானமும் பெற்றுப் பொலிந்த இந்த ஸ்வாமியைச் சீக்ரத்தில் பலர் ஆஶ்ரயித்துக் காலக்ஷேபம் புராண ப்ரவசநம் முதலியவற்றைச் செய்தருளுமாறு வேண்டிக்கொண்டனர். ஸ்வாமி க்ருபையாகச் சென்னையிலும் எழுந்தருளியிருந்து, இங்கே பலருக்குப் பலவிதமான ஆத்ம ஹித வ்யாபாரங்களைச் செய்தருளின விஷயம் அனைவருக்கும் தெரியும்.

சில வருஷங்களுக்குமுன் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனையும் அவரது அருளிச்செயல்களையும் அவதூறாய்ப் பேசச் சிலர் முயற்சித்தபோது, பரவஸ்து ஸ்வாமி அது பொறுக்கமாட்டாமல் பலருடைய ஸஹாயத்தின்பேரில் "ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணீ" என்று பெயர் கொண்ட ஒரு மாதப் பத்ரிகையை ஆரம்பித்தார். அது ஸ்ரீரங்கத்தில் சிலகாலம் நடந்தது. பிறகு ஸ்வாமி தனியாகவே சென்னையிலிருந்தும், பிறகு காஞ்சீபுரத்திலிருந்தும், கடைசியாகத் தில்லைஸ்தானத்திலிருந்தும் அதை நடத்திவந்தார். பத்ரிகையின் ஆரம்பத்திற்குக் காரணமாயிருந்த இதரர்களுடைய தேசிகதூஷணம் நிராகரிக்கப்பட்டு மறைந்த பின்னரும், தேசிகன் திருவடிகளுக்குப் பல விதத்திலும் இந்தப் பத்ரிகை நாளது வரையில் மஹோபகாரம் செய்து கொண்டு வந்திருக்கிறது. அது அந்த ஸ்வாமியின் ஒப்பற்ற கைங்கர்யம். எத்தனை ஸ்தோத்ரங்களும் காவ்யங்களும் எளிதான தமிழ் நடையில் ருசிபெற விளக்கப்பட்டுள்ளன! தேசிக ஸம்ப்ரதாயத்தின் பெருமையும், தேசிக ஸ்ரீ ஸூக்திகளின் அழகும், வ்யாஸங்கள் ரூபமாயும் வ்யாக்யாநங்கள் ரூபமாயும் ஒவ்வொரு மாதமும் ஸம்ரக்ஷிணீ வாயிலாக வெளிவந்ததைத் தென்னிந்தியாவில் பலர் அனுபவித்து வந்திருக்கிறார்கள். இந்தப் பத்ரிகையை நடத்துவதற்காக ஸ்வாமி பட்ட பாடு சொல்லும் திறமல்ல. அஹோராத்ரமும் அதே சிந்தைதான். திருமேனி சென்ற

சில வருஷங்களாக மிகவும் தளர்ந்து போனதையும் பொருட்படுத்தாது, பல ஊர்களுக்குச் சென்று பொருளீட்டி அதை நடத்திவந்தார், நடுவில் சில மாதங்கள் தெலுங்கு லிபியில் அதிகப்படியாக ஸம்ரக்ஷிணீ தோன்றி வந்தது. இவற்றிலெல்லாம் பிறர் ஸஹாயம் சிறிதும் பெற்றாரில்லை. தாம் ஒருவராகவே இருந்து மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாகி, இந்தப் பத்ரிகையைக் கேவலம் ஆசார்ய கைங்கர்யமாக நடத்திவந்த பெருமை இந்த ஸ்வாமியினுடையதே. இதனால் இதுகாறும் பலனையடைந்த நாம் இவர் திறத்தில் என்றென்றும் க்ருதஜ்ஞர்களாயிருக்க ப்ராப்தம். அதோடு அந்த பத்ரிகையை நிறுத்தாமல் மேல் நடத்தினால்தான், நாம் ஸ்வாமி திறத்தில் நமது நன்றியறிவைக் காட்டியவர்களாவோம். தேசிகோத்தமன் கடாக்ஷத்தால் அப்படியே இந்தப் பத்ரிகை நடந்துவரவேண்டுமென்பது அடியேன் ப்ரார்த்தனை.

தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஸம்ரக்ஷணம் ஒருவர் செய்யவேண்டுவதில்லை. அவைகளுடைய மேன்மையே போதுமானது. எனினும் மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கி, நமக்கிருக்கும் நிதிகளை மறந்திருக்கும் மானிடருக்கு, அவர்கள் படிக்கக்கூடிய ரீதியில் ஸ்வாமி தேசிகன் அருளிச் செயல்களை எடுத்துக் காட்டவேண்டியது அவசியம். பரவஸ்து ஸ்வாமியின் ஊக்கமும் உத்ஸாஹமும் அவருடன் மறையாது, நம்மவரில் யாரேனும் இந்தக் கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டு சீக்ரத்தில் ஸம்ரக்ஷணீயை மறுபடி தோற்றுவிக்கவேண்டும் என்பதே அடியேனுடைய வேண்டுகோள். இதுதான் பரவஸ்து ஸ்வாமியின் ஞாபகார்த்தமாக நாம் செய்யக்கூடிய ஞாபகச் சின்னம்.

தி. ராமஸ்வாமி தாஸன்.

---

(6)

ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலையின் அப்த பூர்த்தி.

ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள ஶாஸ்த்ர பாடஶாலையின் முதல் வர்ஷ பூர்த்தி உத்ஸவம் நிகழும் மாசிமீ 15உ [27—2—44] ஞாயிற்றுக்கிழமை தினம் நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீ ஸந்நிதி நியமனத்தின்பேரில் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமியும் ஸ்ரீ கார்யம் ஸ்வாமியும் எழுந்தருளியிருந்தார்கள். திருப்பதியிலிருந்து வித்வான் ஸ்ரீ உப. திருமலை தாதாசார்ய ஸ்வாமி மாம்பலத்திலிருந்து வித்யாரத்நாகரம் கொடைவாசல் ஸ்ரீ உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி முதலிய அநேக வித்வத் ரத்னங்களும், சென்னை ஸர்வ கலாஶாலை ஸம்ஸ்க்ருத அத்யக்ஷர் ஸ்ரீ டாக்டர் குன்னின் ராஜா, திருவல்லிக்கேணி ஸ்ரீ உப. ஆர். கேஶவ ஐயங்கார், ஸ்ரீரங்கம் ரிடயர்ட் இஞ்னியர் ஸ்ரீ. உப. எம். பி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ உப. ஏமப்பூர் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மயிலாப்பூர் ஸ்ரீ. உப. எஸ். வி. வேணுகோபாலாசார்யர், ஸ்ரீ உப. பி. என். ஸ்ரீநிவாஸாசார்யர் முதலிய ப்ரபுக்களும் ஒரகடம் ஸ்ரீ உப. கொ. ஸுந்தரஶாசார்யர், பந்தல்குடி ஸ்ரீ உப. திருமலாசார்யர் முதலிய தமிழ் வித்வான்களும் இன்னும் பல ஆஸ்திகர்களும் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். மதுராந்தக வாஸிகளான அநேக ப்ரஹ்ம வித்துக்களும், ஆஸ்திகாக்ரேஸரர்களும் பாடஶாலையில் ஸாக்ஷாத் அந்வயம் பெற்றிருக்கும் பாடஶாலாத்யக்ஷர் தேவனார்வளாகம் ஸ்ரீ உப. லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி முதலான பண்டித வர்யர்களும் எழுந்தருளி யிருந்தார்கள். இம்மாதிரி அன்று பெரியதொரு ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டி அவ்விடத்தில் சேர்ந்தது. முதல் முதலில் மத்யாந்ஹம் 12 மணிக்குக் கோவிலில் ஸ்ரீ கருணாகரனுக்குத் திருமஞ்ஜனோத்ஸவம் கண்டருளப்பண்ணப்பட்டது. அவ்விடத்தில் பெருமாளை ஸேவித்துத் தீர்த்தம் ஸ்ரீ ஶடாரி முதலிய ப்ரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த பாடசாலை மண்டபத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்தனர், பகல் 2 மணிக்கு ஸங்கம் ஆரம்பித்தது.

முதலில் பாடசாலையில் ஒரு வர்ஷ காலமாக நடைபெற்று வந்த 'கல்யாணபிவர்த்தினீ' என்னும் வித்யார்த்திகளின் ஸங்கம் சேர்ந்தது. பாடசாலையின் மானேஜராகிய ஸ்ரீ உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் ப்ரார்த்தனையின் பேரில் டாக்டர் ஸ்ரீ குன்னின் ராஜா அக்ராஸநம் வஹித்தார். சில வித்யார்த்திகள் மங்கள ஶ்லோகங்களைக் கானம் செய்தார்கள். பிறகு பாடசாலையில் வ்யாகரண ஶாஸ்த்ர ப்ரவசநம் செய்து வரும் பாதூர் ஸ்ரீ உப. ராகவாசார்ய ஸ்வாமி ஸம்ஸ்க்ருத ஶ்லோக ரூபமான ஒரு ஸ்வாகத பத்ரிகையைப் படித்தார். பிறகு ஸபையின் கார்ய தர்சியால் வார்ஷிக அறிக்கை படிக்கப்பட்டது. பாடசாலையில் ஶாஸ்த்ராப்யாஸம் செய்துவரும் சில வித்யார்த்திகளால் வ்யாகரணம் தர்க்கம் முதலிய ஶாஸ்த்ரங்களில் வாக்யார்த்தம் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு ஸ்ரீ உப. திருமலை தாதாசார்ய ஸ்வாமி '[illegible]' என்னும் விஷயத்தைப்பற்றி ஒருமணி காலம் ஸம்ஸ்க்ருதத்தில் உபந்யாஸம் செய்தார். கடைசியாக: அக்ராஸநம் வஹித்துவந்த ஸ்ரீ ராஜா அவர்களால் உபஸம்ஹார ரூபமான ஒரு ஸம்ஸ்க்ருத உபந்யாஸம் படிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ தேவநார்வளாகம் ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் பாடசாலையைப் பற்றி அரை மணி அவகாசம்போல் பேசினார். பிறகு க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் செய்யப்பட்டு 4½ மணிக்கு அந்த ஸங்கம் கலைந்தது.

அந்த ஸங்கம் கலைந்தவுடன், பாடசாலையின் வார்ஷிகோத்ஸவம் உபக்ரமிக்கப்பெற்றது. இந்த ஸங்கத்தில் அக்ராஸநம் வகிப்பதற்குப் பூர்வமே ஸம்மதித்திருந்த ஸ்ரீ உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி தமது உடம்பு அஸ்வாஸ்த்யத்தால் வரக்கூடாமற் போகவே, அவருடைய ஸ்தாநத்தில் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி எழுந்தருளி யிருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்பட்டார். அதற்கு அந்த ஸ்வாமி இணங்கி அக்ராஸநத்தை வஹித்தார். பிறகு ஸ்ரீ மானேஜர் பாடசாலை ஸம்பந்தமான வார்ஷிக அறிக்கையைப் படித்தார். பிறகு ஸ்ரீ ஆர். கேஶவ ஐயங்கார் ஸ்வாமி 'ஸ்ரீ ஶடகோபஶ்ரீ:' என்னும் விஷயத்தைப்பற்றி ஒருமணி அவகாஶம் உபந்யஸித்தார். பிறகு ஸ்ரீ உப. கொடைவாசல் ஸ்வாமி, ஸ்ரீ உப. பி. என். ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ உப. பந்தல்குடி ஸ்வாமி முதலிய ஆஸ்திகர்கள் ஸ்ரீ அழகியசிங்கருடைய ஔதார்யத்தைப் புகழ்ந்து பேசினார்கள். பிறகு பாடசாலையின் மஹிமையைப்பற்றி அந்த ஸ்தலவாஸியான பரமேகாந்தி வித்வான் கருடபுரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஒரு ஶ்லோகமும், சிரோமணி வித்வான் கருடபுரம் திருமலாசார்ய ஸ்வாமியால் சில ஶ்லோகங்களும் படிக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ கார்யம் ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹித்து அனுப்பிய ஸ்ரீமுகத்தை வாசித்தார். அதற்குப் பிறகு ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி அன்று நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் உபஸம்ஹரித்து அரைமணி அவகாஶம் திருவாய்மலர்ந்தருளினவுடன், கோஷ்டிக்குச் சந்தந தாம்பூலாதிகள் வேத பாராயண புரஸ்ஸரமாக ஸமர்ப்பிக்கப்பட்டு உத்ஸவம் மாலை 7 மணி சுமாருக்கு முடிவு பெற்றது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ பக்தன்.

---

(7)

ஸ்ரீ ரங்கநாதன் மங்களாஶாஸநம்

ஸுபாநுஹு மாசிமீ" முதல் தேதி (13—2—44) ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று தினங்கள் ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதியில் மங்களாசாஸநம் செய்தருளினர். ஸ்ரீ அழகியசிங்கர் அன்று காலையில் அபிகமந ஆரா

தநத்தை முடித்துக்கொண்டு, கோயில் ட்ரஸ்டிகள் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் முதலியவர்கள் எதிர்கொண்டுவந்து அழைத்துச் செல்ல, சத்ர சாமராதி பிருதுகளுடன் ஸ்ரீ அழகிய மணவாளன் ஸந்நிதிக்கு எழுந்தருளினர். த்வஜஸ்தம்பத்தின் அருகே ஸ்ரீ சடாரியை எழுந்தருளப் பண்ணினவுடன் ஸ்ரீ அழகியசிங்கர் தண்டன் ஸமர்ப்பித்துத் 'தங்யோஸ்மி என்று ஸ்வீகரித்தருளி, உள்ளே சென்று ஸ்ரீ விஷ்வக்ஸேநர் த்வாரபாலகர்களின் அநுனுமதியைப் பெற்று [illegible]' என்கிறபடி தண்டன் ஸமர்ப்பித்து, "மாயோனை மணத்தூணே பற்றிநின்று என் வாயார என்றுகொலோ வாழ்த்து நாளே" என்கிறபடி மணத்தூணைப் பற்றி நின்று பல்லாண்டிட்டு வாயார வாழ்த்தி, "கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கு நாளே", என்றும், "திருவரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும் போராழி யம்மானை கண்டு துள்ளிப் பூதலத்தில் என்றுகொலோ புரளுநாளே" என்றும் மழைக்கண்ணீர் மல்க நின்று வாயார வந்தித்து சாதராக்களையும் உபஹாரமும் ஸமர்ப்பித்துக் கற்பூர ஹாரத்தியுடன் ஆபாத சூடம் பெருமாளை ஸேவித்து, தீர்த்தம் சடாரி திருப்பரிய்ட்டம் முதலியவற்றை ஸ்வீகரித்து, அவள் அநுமதி பெற்று ஸ்ரீ ரங்கநாயகி ஸந்நிதிக்குச் சென்று ஸ்ரீகுணரத்ந கோஶத்தினல் ஸ்துதித்து, விலையுயர்ந்த பெரியதொரு பட்டுச் சேலையையும் உபஹாரங்களையும் தாயாருக்கு ஸமர்ப்பித்து ப்ரஸாதங்களை ஸ்வீகரித்தருளினர், அப்படியே ஆழ்வார் எம்பெருமானர் ஸ்ரீ தேசிகன் முதலிய ஸந்நிதிகளில் மங்களாசாஸதம் செய்தருளினர். பிறகு ட்ரஸ்டிகளுக்கும் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் முதலியவர்களுக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் பலமந்த்ராக்ஷதைகள் ஸாதித்து அநுக்ரஹித்தருளினர்.

எக்ஸிக்யுடிவ் ட்ரஸ்டிகளான ஸ்ரீ கல்யாணசுந்தர முதலியார், ஸ்ரீ நரஸிம்ஹ ஐயங்கார், ராவ் ஸாஹிப் ஸ்ரீ நாராயண ஐயங்கார் ஸ்ரீ ரங்கநாத ராவ் அவர்களும் எக்ஸிக்யுடிவ் ஆபிஸரான ஸ்ரீ. ஷண்முகம் பிள்ளை அவர்களும் சிறப்பாக ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸநத்தை நடத்தி வைத்ததைப்பற்றி ஷியார்களுக்கு நம் மனமார்ந்த க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கின்றேம். இந்த மஹநீயர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அருள்புரிவாராக.

அம். வ. நரஸிம்ஹன், ஸ்ரீகார்யம்.

---

(8)

ஸ்ரீ கல்யாண அபிவ்ருத்தி ஸபா

ஷை ஸபையானது 27—12—43உ ப்ரதமை யன்று மாலை 4-30 மணிக்குக் கூடியது. அச்சமயம் ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உ. வே. நாராயணசார்ய ஸ்வாமி தலைமை வஹித்தார். அப்பொழுது வ்யாகரண சிரோமணி முதல் வகுப்பில் படித்து வரும் K. ராமாநுஜாசாரி என்னும் வித்யார்த்தி, "आचार्यदेवो भव" என்னும் வடமொழியில் எழுதப்பட்ட வியாஸத்தைப் படித்தார். பிறகு அவ்விஷயத்தைக் குறித்து ஸபாத்யக்ஷர் வடமொழியில் வித்யார்த்திகளுக்கு நன்கு உபதேசித்தார். பிறகு ஸபை இனிது கலைந்தது. ஷை ஸபையின் சார்பில் 7—1—44-ல் வெள்ளிக்கிழமை 4-30 மணிக்கு திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாயாத்யாபகர் ஸ்ரீ. உ. வே. மதுராந்தகம் வீரராகவாசாரிய ஸ்வாமி வரவேற்கப்பட்டார். அச்சமயம் அவர் "विद्याख्यानोपयोगः" என்னும் விஷயத்தைக் குறித்து வடமொழியில் ஸகலருக்கும் நன்கு விளங்கும்படி மிகவும் இனிமையாக உபந்யஸித்தார். பிறகு மங்களத்துடன் ஸபை முடிவடைந்தது.

C. R. ராஜகோபாலன், கார்யதர்சி.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலையின் முதல் வர்ஷ பூர்த்தி மஹோத்ஸவம்

ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் சென்ற வர்ஷத்தில் ஸ்தாபிக்கப்பெற்று ஒரு வர்ஷகாலமாக நடைபெற்று வரும் ஶாஸ்த்ர பாடஶாலையின் முதல் வர்ஷ பூர்த்தி மஹோத்ஸவம், நிகழும் மாசி மீ 15உ (27-2-44) ஞாயிற்றுக்கிழமை தினம் நடைபெற்றது. அதன் வைகரி முழுவதும் இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் விஸ்தாரமாக ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த உத்ஸவத்தை ஸ்ரீ ஶரண்யன் மிகவும் த்ருப்திகரமாக நடத்திக்கொண்டான் என்பதை, அங்கு அப்பொழுது ஸந்நிஹிதர்களாக இருந்த ஸ்வாமிகளெல்லாரும் அறிவார்கள். அங்கு எழுந்தருளியிருந்த வித்வத் ரத்நங்களுடைய கோஷ்டியும், அவர்களால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸூக்தி விஶேஷங்களும், அந்த உத்ஸவத்தைப் பார்த்து அதன் மஹிமையை ஸாக்ஷாத்தாக அநுபவிக்கவேண்டுமென்னும் இச்சையுடன் அங்கு சேர்ந்திருந்த மஹா ஜநங்களின் உத்ஸாஹமும், அந்த உத்ஸவம் எம்பெருமானால் போர உகந்தருளப்பட்டது என்பதற்குப் போதுமான நிதர்ஶநம். ஒன்று மாத்ரம் பெரியதொரு குறைவாக இருந்தது. இம்மாதிரியான வைதிக உத்ஸவங்களில் மிகுந்த ஶ்ரத்தையையும் உத்ஸாஹத்தையும் வஹிப்பவரும், இந்தப் பாடஶாலையின் ஆரம்பம் முதல் ஒவ்வொரு விஶேஷித்த காலத்திலும் தாம் ஸாக்ஷாத்தாக வந்திருந்து அதைப் பெருமைப் படுத்தினவருமான ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, இப்பொழுது இந்த உத்ஸவத்திற்கு எழுந்தருளாமல் இருக்கும்படி ஸம்பவித்துவிட்டது. அந்த ஸ்வாமியை இந்த உத்ஸவத்

தில் அக்ராஸநம் வஹிக்கும்படி நாம் பூர்வமே ப்ரார்த்தித்திருந்தோம். அவரும் அதை மிக்க க்ருபையுடனும் ப்ரீதியுடனும் அங்கீகரித்திருந்தார். உத்ஸவம் நடைபெறுவதற்கு முன் தினத்தில் அவருக்குத் திருமேனியில் நேர்ந்த ஸ்வல்ப அஸ்வாஸ்த்யமும், அப்ரதீக்ஷிதமாக ஸம்பவித்த வேறு சில லௌகிக நிர்ப்பந்தங்களுமே அவரை அந்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்ற வொட்டாமல் தடுத்துவிட்டன. இருந்தபோதிலும் அவருடைய ப்ரீதி விசேஷம் பூர்ணமாக இருந்தபடியால், அவர் ஸந்நிஹிதரா யிருந்தால் என்ன சோபை அந்த உத்ஸவத்திற்கு ஸம்பவித்திருக்குமோ, அதற்குத் துல்யமான சோபையுடனேயே அந்த உத்ஸவம் நடந்தேறியது.

இந்த உத்ஸவத்திற்குச் சிறப்பைச் செய்த ஸாமக்ரிகளுள், ஸ்ரீ. உப. தாதாசார்ய ஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத உபந்யாஸம் ப்ரதாநமானது. அதன் சொற்பொழிவு நம்முடைய மநஸ்ஸைப் பலமாக ஆகர்ஷித்தது. ஆரம்பம் முதல் அவஸாந பர்யந்தம் எவ்வித தழதழப்புமின்றிக்கே மிகவும் லளிதமான நடையில் அவருடைய முகத்திலிருந்து ப்ரவஹித்த சொற்கள், “**संश्रवे मधुरम्**” என்கிறபடி மிக்க ஆநந்தத்தை விளைவித்தன. ஸம்ஸ்க்ருத பாஷை ஸாதாரண ஸம்பாஷணத்திற்கு அநர்ஹ மென்று ஓர் அபவாதத்தைச் சொல்லிவரும் அஜ்ஞர்கள் இந்த உபந்யாஸ காலத்தில் ஸந்நிஹிதர்களாக இராமற்போனர்களே என்னும் நினைவும் நமது புத்தியில் அப்பொழுது ஜநித்தது. நிரர்க்களமான வாக் ப்ரவாஹம் எவருக்குத் தான் ஆச்சர்யத்தை விளைவிக்கமாட்டாது? நிற்க, இந்த ஸ்வாமி ஒருமணி அவகாசம் பஹுளவாக வ்யாஹரித்தருளினர். “**न किञ्चिदपशब्दितम्**”. இது பெரியதொரு மஹிமை. வார்த்தையின் மஹிமை இவ்வாறு இருக்க, அர்த்தத்தின் பெருமையும் இதற்குக் குறையாமலே இருந்தது என்று சொல்லவேண்டும். அவரால் வெளியிடப்பட்ட விஷயங்களெல்லாம் அதிமாத்ரம் கம்பீரமாக இருந்தன. பண்டிதர்களால் ஸம்பாதிக்கப்பட்டுள்ள வித்யை, “**जीर्णमङ्ग**” என்று வீண் போகாமல், பிறர்களுக்கு ப்ரயோஜநப்படுமாறு ப்ரவசந முகமாகவும் லேகந முகமாகவும் வெளிவரவேண்டு மென்றும், பண்டிதர்களுடைய வாக் மநஸ் கர்மமெல்லாம் கேவலம் ஆத்ம பர்யவஸாயியாக இராமல் தம்மை விசேஷணமாக உடைய விசிஷ்டமாகிய ஜகத்தின் ஹிதத்தில் பர்யவஸிக்கவேண்டு மென்றும் அவர் வற்புறுத்தினது அதிமாத்ரம் கம்பீரமே. இவையெல்லாவற்றையும் காட்டிலும் அவர் வற்புறுத்தின மற்றொரு

விஷயம் நம் எல்லாராலும் க்ராஹ்யதமமாக இருந்தது "अथाष्टावात्मगुणाः" என்னும் கௌதம ஸூத்ரத்தை உதாஹரித்து, ஒருவனிடம் சத்வாரிம்ஶத் ஸம்ஸ்காரமும் பூர்ணமாகப் பொதிந்திருந்தபோதிலும், இந்த எட்டு ஆத்மகுணங்கள் அவனிடம் இராமற் போனால், "न स ब्रह्मणस्सायुज्यमाप्नोति" அவனுக்கு நிஶ்ரேயஸம் ஸம்பவியாது என்று அவர் விளக்கியது எவருக்கு அந்வயிக்கமாட்டாது? அஹங்காரம் அஸூயை பைஶூந்யம் க்ரோதம் முதலிய தோஷங்களல்லவோ நம்மை மிகவும் கெடுக்கின்றன? பண்டிதர்களுடைய தர்மத்தைப்பற்றிப் பேசி வருகையில் அந்த ஸ்வாமி இதைப்பற்றி ப்ரஸ்தாவித்ததும் அவதானிக்கத் தகுந்தது.

"अभिजनधनविद्यावृत्तदाक्ष्यादिरूपैः"

என்று மநுஷ்யர்களைக் கெடுப்பதாக உதாஹரிக்கப்பட்டுள்ள தோஷங்களுள் வித்யையே மிகவும் க்ரூரம் என்பது அவருடைய ஹ்ருதயத்தில் அப்பொழுது இருந்ததோ என்று நாம் ஸந்தேஹித்தோம். இவ்வாறு மிக்க ரஸத்துடனும் மநோஜ்ஞமான மநோபாவத்துடனும் அந்த ஸ்வாமி உபந்யஸித்த ஒருமணி காலம் முழுவதும் ஒரு த்ருடி போலவே போயிற்று. டாக்டர் ராஜா அவர்களுடைய உபந்யாஸமும் அதிமாத்ரம் ஶ்லாக்யமாகவே இருந்தது. அவருடைய உபந்யாஸத்திலும் வாங் மஹிமை அர்த்த மஹிமை இரண்டும் பூர்ணமாகவே இருந்தன. ஸ்ரீ கேஶவய்யங்கார் ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸமும் அந்யாத்ருஶமே. அவருடைய உபபாதநத்தின் பெருமை, உபபாதிக்கப்பட்ட விஷயத்தின் பெருமையை ஒத்ததாகவே இருந்தது என்று சொல்வதே அதற்குத் தகும். பரம நிஶ்ரேயஸத்திற்குத் துல்யமான இப்படிப்பட்ட கோஷ்டி ஸூகத்தை ஸ்ரீ ஶரண்யன் அடிக்கடி அநுக்ரஹிக்க வேணுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

* * * * *

ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் மங்களாஶாஸநம்.

ஸ்ரீ அழகியசிங்கர் இப்பொழுது ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்னும் விஷயம் பல பேருக்குத் தெரிந்திருக்கலாம். சென்ற மாஸத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய மங்களாஶாஸநம் நடந்தது. முதலில், பூர்ண மர்யாதைக்கு ஸ்வல்ப ஆக்ஷேபம் இருந்ததாகவும், பிறகு அந்த ஆக்ஷேபம் ஶாந்தமாகி யதாக்ரமம் மர்யாதைகள் செய்யப்பட்டனவென்றும் நாம் அறிகிறோம். இது ஒரு ஸந்தோஷ ஹேதுவே.

உபநிஷத் பாகம்

இந்த ஸஞ்சிகையில் உபநிஷத் பாகம் வெளிவரவில்லை. காகிதத்தின் தௌர்லப்யத்தால் ஸஞ்சிகையின் அளவைக் கொஞ்சம் சுருக்கிக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ அழகியசிங்கர் நியமநமாயிற்று. அது உசிதமான நியமநமே. அதை எவ்விதம் செய்து கொள்ளலாமென்று ஆலோசித்தபொழுது, இதரர்கள் ஸம்பந்தமான விஷயத்தில் அந்த ஸங்கோசத்தைச் செய்வதைக் காட்டிலும், சொந்த விஷயத்தில் அதைச் செய்துகொள்வது நிராபாதமாக இருக்குமென்று எண்ணி உபநிஷத் பாகத்தைத் தத்காலம் நிறுத்தியிருக்கிறோம். காகிதப் பஞ்சம் நீங்கி, அது ஸுலபமாகக் கிடைக்குங்கால் உபநிஷத்தின் மற்றைப் பாகங்களை மீண்டும் அச்சிட்டு ப்ரசுரிக்கலாமென்பது நமது ஆலோசனை. ஸ்ரீ ஶரண்யன் அநுகூலிக்கவேணும்.

* * * * *

ஶோசநீயமான சில ஸம்பவங்கள்

சற்றேறக்குறைய சென்ற இரண்டொரு மாஸத்திற்குள் நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் அநர்க்கமான சில வ்யக்திகளை இழந்துவிட்டது. ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்ரீராம தேஶிகாசார்ய ஸ்வாமி, ஆசார்யவர்யரான ஸ்ரீ. உப. நடாதூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, பரவஸ்து ஸ்ரீ உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இவர்களெல்லோரும் இந்த விபூதியிலிருந்து மறைந்து விட்டார்கள். இவர்களெல்லோரும் பெரிய வித்வான்கள்; தமது ஜ்ஞாநத்தால் பிறருக்குப் பரமோபகாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் திரோதாநம் அடைந்தது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தின் பாக்யக் குறைவே.

சந்தாதாரர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்

ஸஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளும் சந்தாதாரர்கள், இப்போது அச்சிட்டு அனுப்பியுள்ள தங்கள் மேல் விலாஸம் சரியாக இருக்கிறதா வென்று பார்ப்பதுடன், சந்தாத் தொகை அனுப்பும்போது மேல் விலாஸத்திற் காணப்படும் தங்கள் சந்தா நம்பரையும் தயை செய்து தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். மேல் விலாஸத்தில் தவறுதலோ மாறுதலோ ஏற்பட்டால் உடனே அதையும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ :

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா'வின் 1944-பிப்ரவரி மாதத்துச் சந்தா வஸூல்.

1943—ம் ஆண்டுச் சந்தா

			ரூ.	அ.
172	ஸ்ரீ	C. S. பார்த்தஸாரதி, லாஹூர் ...	3	8
191	,,	V. K. கோதண்டராமன், வடுவூர் ...	3	0
304	,,	ஸ்வாமி ராகவாசார்யா, குன்வார்ப்பூர் ...	3	0
417	,,	V. சேஷாத்ரி ஐயங்கார், திருக்கோயிலூர் ...	3	0
458	,,	T. K. க்ருஷ்ணமாசார்யர், திருக்கள்ளம் ...	3	0
492	,,	C. S. குப்புஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை ...	1	8

1944-ம் ஆண்டுச் சந்தா

			ரூ.	அ.
7	ஸ்ரீ	K. ராஜகோபாலன், பம்பாய் ...	3	0
8	,,	S. ராகவாசாரி, பம்பாய் ...	3	0
20	,,	S. ராமஸ்வாமி, பம்பாய் ...	3	0
25	,,	T. K. R. ஐயங்கார், பம்பாய்	3	0
26	,,	V. V. ஐயங்கார், பம்பாய் ...	3	0
27	,,	R. L. நாராயணன், கல்கத்தா	3	0
45	,,	R. ரங்காசார்யர். பம்பாய் ...	3	0
47	,,	S. வரதாசார்யர், பம்பாய் ...	3	0
48	,,	M. S. பாஷ்யம் ஐயங்கார், பம்பாய் ...	3	0
52	,,	S. ராஜகோபாலய்யங்கார், பம்பாய் ...	3	0
67	,,	T. S. பிச்சுவையங்கார், திருக்குறுங்குடி ...	3	0
70	,,	G. ஸ்ரீநிவாஸாசார்யர், பொள்ளாச்சி ...	3	0
79	,,	D. P. செல்லமையங்கார், விழுப்புரம் ...	3	0
90	,,	C. V. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீரங்கம் ...	3	0
112	,,	V. நாராயணையங்கார், பெங்களூர் ...	3	0
113	,,	V. கோபாலஸாமி ஐயங்கார், பெங்களூர் ...	3	0
119	,,	P. க்ருஷ்ணஸ்வாமி, சென்னை ...	3	0
120	,,	க்ருஷ்ணஸ்வாமி—செல்லம்மாள், மயிலாப்பூர் ...	3	0
121	,,	P. K. துரைஸாமி ஐயங்கார், சென்னை ...	3	0
147	,,	K. ஆராவமுதையங்கார், ஸ்ரீரங்கம் ...	3	0
170	,,	T. தோதாத்ரி ஐயங்கார், தெப்பக்குளம் ...	3	0
175	ஸ்ரீ	B. K. குப்புஸ்வாமி ஐயங்கார், ஹூப்லி ...	3	0
226	,,	A. R. நரஸிம்ஹ ஐயங்கார், கோயம்புத்தூர் ...	3	0
250	,,	K. V. வெங்கடாசார்யர், நாமக்கல் ...	3	0
252	,,	லக்ஷ்மீநரஸிம்ஹ ஐயங்கார், கோயிலவெண்ணி ...	3	0
255	,,	ரகுநாதையங்கார், கோயில்வெண்ணி ...	3	0
266	,,	லக்ஷ்மீநரஸிம்மாசார்யர், மன்னார்குடி ...	3	0
384	,,	S. வீரராகவன், மாயவரம் ...	3	0
387	,,	D. ராமஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர் ...	3	0
405	,,	K. S. மாதவாசார்யர், கும்பகோணம் ...	3	0
450	,,	V. K. ஐயங்கார், இண்டோர் ஸிடி ...	3	0
458	,,	T. K. க்ருஷ்ணமாசார்யர், திருக்கள்ளம் ...	3	0
474	,,	N. ராகவாசார்யர், உஸ்மனுபாத்	3	0
485	,,	T. துரைஸாமி ஐயங்கார், பெங்களூர் ...	3	0
486	,,	N. V. சாரி, பம்பாய் ...	3	0
504	,,	R. ராஜகோபாலாசார்யர். திருப்புல்லாணி ...	4	0
510	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார், திருக்குறுங்குடி ...	3	0
529	,,	R. ஸ்ரீநிவாஸையங்கார், திருப்பத்தூர் ...	3	0
541	,,	T. V. வரதராஜையங்கார், தஞ்சாவூர் ...	3	0
547	,,	A. V. நரஸிம்ஹன், மதுராந்தகம் ...	1	8
559	,,	M. V. ரங்கஸாமி ஐயங்கார், கும்பகோணம் ...	3	0
560	,,	R. S. ஐயங்கார், கல்கத்தா ...	3	0
561	,,	R. ஜகந்நாதையங்கார், கல்கத்தா ...	3	0
562	,,	A. நரஸிம்ஹாசார்யர், பெங்களூர் ...	3	0
563	,,	A. R. கோவிந்தராஜையங்கார், பெல்லாரி ...	3	0
572	,,	R. S. ஐயங்கார், பம்பாய் ...	3	0
575	,,	V. N. பார்த்தஸாரதி பிள்ளை, விக்ரவாண்டி ...	3	0
576	,,	T. K. சௌரிராஜையங்கார், பிராஞ்சியங்கரை ...	3	0
578	,,	K. V. பாஷ்யமையங்கார், சென்னை ...	3	0
99	,,	R. ஸந்தானம் ஐயங்கார், தியாகராய நகர் ...	3	0
166	,,	V. N. ரங்கஸ்வாமி ஐயங்கார், குன்னத்தூர் ...	3	0

Regd. No. M. ***4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1.	அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யானத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	ஷை (பைண்டில்லாதது) ...	5—8—0	6—8—0
3.	உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4.	உக்திநிஷ்டாபரணோத்யோதம் („)	0—8—0	0-12—0
5.	வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யானம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6.	ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் („)	0—8—0	0-12—0
7.	ஷை (தெலுங்கு லிபி)	0-12—0	1—0—0
8.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0-12—6
9.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
10.	ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
11.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
12	ஈசாவாஸ்ய, கேந—கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.